உ
சிவமயம்

# திருவருள்

★ அவனருளாலே அவன்தாள் வணங்கி வாழ்வோம் ★

மலர் 1 | இந்துசமயச் சஞ்சிகை | இதழ் 3



## மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

"தொடுக்கும் கடவுட் பழம்பாடல்
தொடையின் பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழின் ஒழுகுநறுஞ்
சுவையே அகந்தைக் கிழங்கையகழ்ந்
தெடுக்குந் தொழும்ப ருளக்கோயிற்
கேற்றும் விளக்கே வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே யெறி தரங்கம்
உடுக்கும் புவனங் கடந்துநின்ற
ஒருவன் திருவுள் ளத்திலழ
கொழுக வெழுதிப் பார்த்திருக்கும்
உயிரோ வியமே மதுகரம்வாய்
மடுக்கும் குழற்கா டேந்துமிள
வஞ்சிக் கொடியே வருகவே
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே"

— குமரகுருபரர்

THIRUVARUL — A Hindu Magazine — Vol 1 No. 3

" நல்லொழுக்க மில்லாது
ஞான நூ லோதியும்
நல்ல பயனில்லை "

# K. பாலகிருஷ்ணன்

312, நீர்கொழும்பு வீதி,

**பேலியாகொடை**

தொலைபேசி எண்: 070 — 284

உ

சிவமயம்

# திருவருள்

அவனருளாலே அவன் தாள் வணங்கி வாழ்வோம்

| மலர் 1 | இந்துசமயச் சஞ்சிகை | இதழ் 3 |
|---|---|---|

## பொருளடக்கம்

இலக்கம் பக்கம்

1. நலம் பெறுவோம் — தேவாரம் ... 1
2. இணையிலா இந்துமதம் ... 4
இலக்கிய கலாநிதி பண்டிதமணி
சி. கணபதிப்பிள்ளை ...
3. சைவம் பிரகாசிக்க ... 8
... பண்டிதை த. வேதநாயகி ...
4. நம்பினார் நன்மை பெறுவர் ... 11
... ஆர். வி. கொழும்பு ...
5. சைவசித்தாந்தத்திற்கு
உரிய தனிச் சிறப்புக்கள் ... 13
... புலவர், சித்தாந்த வித்தகர் முரு. பழ
இரத்தினம் செட்டியார் ... (மூவார்)
6. கிரியைத் தொண்டு ... 21
சிவஞானவாரிதி, சைவசித்தாந்தகாவலர்.
குமாரசுவாமி குருசுவாமி
7. பவானி உறை வேதநாயகி ... 23
8. நல்லை ஆதீன முதல்வர் .. 26
9. அன்னை காமேசுவரி அருள்விளக்கம் ... 28
... பிரம்மஸ்ரீ சு. வை. ஆத்மநாதசர்மா
10. நாயகி பொற்றேரை இழுத்திடுவோம் 33
காவலூர்க்கவிஞன் ஞா. ம. செல்வராஜன்
11. நயினை நாகேஸ்வரி குல. சபாநாதன் 35
12. நாகவீஸ்வரியம்மை பதிகம் 39
13. தேவி பஞ்சகம் 40
... க. இராமச்சந்திரன் ...
14. தெய்வம் ஒன்று 42
... திருமுருக கிருபானந்தவாரியார் ...

# திருவருள்

**யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்**

ஆசிரியர் குழு: திரு. V. சதாசிவம்
திரு: கு. குருசுவாமி
திரு. A. V. சர்மா
திரு. L. P. சாமி
திரு. து. சிவசுந்தரம்
திரு. ம. இரத்தினசபாபதி
திருமதி ம. யோகநாதன்

பதிப்பாளர்: திரு. R. வைத்தமாநிதி

நிருவாகம்: திரு. S. யோகநாதன்
திரு. ம. கனகசபாபதி
திரு. K. செல்லையா

விளம்பரம்: திரு. T. M. ஆவுடையப்பன்
திரு. P. பாலசுந்தரம்
திரு. K. குமாரசுவாமி
திரு. P. K. சந்திரசேகரம்

விநியோகம்: திரு. S. பத்மநாதன்
திரு. D. சுப்பிரமணியம்
திரு. க. இளையதம்பி
திரு. R. திருலோகசுந்தரம்

தங்களது காசுகட்டளை, தபாற்கட்டளை, காசோலை ஆகியவற்றை R. வைத்தமாநிதி என்ற பெயருக்கே அனுப்பி வையுங்கள். கடிதங்கள், கட்டுரை, மற்றும் விஷயதானங்கள் ஆகியவற்றை இல. 5, கன்னாரத் தெரு, கொழும்பு-13 என விலாசமிட்டு அனுப்புங்கள்.

திருச்சிற்றம்பலம்

# நலம் பெறுவோம்!

(திருஞானசம்பந்தர் தேவாரம் - திருவாவடுதுறை)

திருஞானசம்பந்தரது தந்தையார் சிவபாதவிருதயர் சிவனைப் பொருளாகக் கொண்டு வேள்வி யொன்றினைச் செய்ய விரும்பினார். அதற்குத் தேவையான பொன்னை இப் பதிகத்தைப் பாடிய பின்னர் இறையருளால் பெற்றுத் தந்தையாருக்கு அளித்தார் என்று இப்பதிக வரலாறு கூறுகிறது.

இக்காலத்திலும் இப்பதிகத்தின் துணைகொண்டு, தமது தேவைகளைப் பெற்ற சைவ அன்பர்கள் பலர் உளர். யாமும் அவ்வழி நின்று, இப்பதிகத்தினை மெய்யன்போடும் நம்பிக்கையுடனும் ஓதி நலம் பெறுவோமாக!

இடரினுந் தளரினு மெனதுறுநோய்
தொடரினு முனகழ் றொழுதெழுவேன்
கடறனி லமுதொடு கலந்தநஞ்சை
மிடறினி லடக்கிய வேதியனே
இதுவோவெமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின்னருளாவடுதுறை யரனே.

வாழினுஞ் சாவினும் வருந்தினும்போய்
வீழினு முனகழல் விடுவேனல்லேன்
தாழிளந் தடம்புன றயங்குசென்னிப்
போழிள மதிவைத்த புண்ணியனே
இதுவோவெமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருளாவடுதுறை யரனே.

நனவினுங் கனவினு நம்பாவுன்னை
மனவினும் வழிபடல் மறவேனம்மான்
புனல்விரி நறுங்கொன்றைப் போதணிந்த
கனலெரி யனல்புல்கு கையவனே
இதுவோவெமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருளாவடுதுறை யரனே.

தும்மலோ டருந்துயர் தோன்றிடினும்
அம்மரெடியலா லாற்று தென்னுக்
கைமல்கு வரிசிலைக் கணையொன்றினால்
மும்மதி ளெரியெழ முனிந்தவனே
இதுவோவெமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருளாவடுதுறை யரனே.

கையது வீழினுங் கழிவுறினும்
செய்கழ லடியலாற் சிந்தைசெய்யேன்
கொய்யணி நறுமலர் குலாயசென்னி
மையணி மிடறுடை மறையவனே
இதுவோவெமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருளாவடுதுறை யரனே.

வெந்துயர் தோன்றியோர் வெருவுறினும்
எந்தாயுன் னடியலா லேத்தாதென்னு
ஐந்தலையரவு கொண்டரைக் கசைத்த
சந்தவெண் பொடியணி சங்கரனே
இதுவோவெமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருளாவடுதுறை யரனே.

வெப்பொடு விரவியோர் வினைவரினும்
அப்பாவுன் னடியலா லரற்றுதென்னு
ஒப்புடை யொருவனை யுருவழிய
அப்படி யழலெழ விழித்தவனே
இதுவோவெமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருளாவடுதுறை யரனே.

பேரிடர் பெருகியோர் பிணிவரினுஞ்
சீருடைக் கழலலாற் சிந்தைசெய்யேன்
ஏருடை மணிமுடி யிராவணனை
ஆரிடர் படவரை யடர்த்தவனே
இதுவோவெமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருளாவடுதுறை யரனே.

உண்ணினும் பசிப்பினு முறங்கினுநின்
ஒண்மல ரடியலா லுரையாதென்னைக்
கண்ணனுங் கடிகமழ் தாமரைமேல்
அண்ணலு மளப்பரி தாயவனே
இதுவோவெமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருளாவடுதுறை யரனே.

பித்தொடு மயங்கியோர் பிணிவரினும்
அத்தாவுன் னடியலா லரற்றுதென்னைப்
புத்தருஞ் சமணரும் புறனுரைக்கப்
பத்தர்கட் கருள்செய்து பயின்றவனே
இதுவோவெமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருளாவடுதுறை யரனே.

அலைபுன லாவடு துறையமர்ந்த
இலைநுனை வேற்படை யெம்மிறையை
நலமிகு ஞானசம் பந்தன்சொன்ன
விலையுடை யருந்தமிழ் மாலைவல்லார்
வினையாயின நீங்கிப்போய் விண்ணவர் வியனுலகம்
நிலையாகமுன்னேறுவர் நிலமிசை நிலையிலரே.

திருச்சிற்றம்பலம்

---

நமது ஆலயங்களின் புறச்சுவர்களில் வெள்ளை, செம்மை ஆகிய நிறங்கள் அடுத்தடுத்துப் பூசப்படுவது ஏன்?

உயர்ந்த எண்ணங்களுடன் கூடிய தூயமனத்துடன் செம்மையும் தியாக உணர்வும் கொண்ட வாழ்க்கையை நாம் மேற்கொள்ளவேண்டும் என்பதைக் குறிக்கவே இவ்வாறு பூசப்படுகிறது.

-ஆ. வி.மூ. -

# இணையிலா இந்துமதம்

- இலக்கிய கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை -

இத்தலையங்கம் வெற்றிலையூர் இந்துமாமன்றம் பணித்தது. இதற்குப் பழைமையானதும் சாத்திரங்களில் வழங்குவதுமான பெயர் 'வைதிகசைவம்'. வாழி 'வைதிகசைவம்' என்பது உமாபதிசிவத்தின் வாக்கு.

வைதிகம் — வேதநெறி; அறிவுநெறி.
சைவம் — சிவசம்பந்தம்; அருள்நெறி; ஆகமநெறி.

★

வைதிகம் சைவத்தில் சென்று முற்றுவது.
சைவம் வைதிகத்தின் வழி வருவது.

★

சைவத்தில் முற்றாத வைதிகம் அவைதிகம்.
வைதிகத்தின் வழிவாராத சைவம் அசைவம்; பாசண்டம்.

'இணையிலாஇந்துமதம் வைதிகசைவம்'. ஆனால், அதற்கு இணையிலாமை பொருந்துமாறு எங்ஙனம்? இந்த விசேடணம் விஸ்தாரமாக விசாரிக்கற்பாலது!

★

சமயகோடிகள் ஒவ்வொன்றும் தனித்தனி தான் ஒன்றுமே இணையிலா உண்மைச்சமயம் என்று கூக்கிரலிடும்போது, அந்த விசேடணத்தை வைதிகசைவம் கட்டியணைப்பதாற் பயன் யாதோ? என்ற கேள்வி எழலாம். அந்தக் கேள்விக்கு விடை தந்து வைதிகசைவத்தின் இணையிலாமையை நாட்டுகின்றார் தாயுமானவர்.

★

தாயுமானவரை அணுகுமுன் ஒரு விளக்கம் பெறு வோம்:– ஒருண்மை பல பொய்த்தோற்றங்களை உடைய தாயிருக்கும். தெருவிற் கிடந்த ஒரு கயிறு ஒரு சிலருக்கு பாம்பாயும், வேறு சிலருக்கு மரத்துண்டாயும், மற்றுஞ் சில ருக்குச் சாணமாயும் அவரவர் நின்ற நிலைக்கும் பார்வைக் கும் ஏற்றவாறு காட்சியளிக்கலாம்.

ஒவ்வொருவரும் தாம் தாம் கண்டதே சத்தியம் என்று தம்முள் மாறுபட்டுப் போர் தொடுக்கலாம்; நூலுரைகள் பண்ணலாம்.

கயிற்றைக் கண்ணுரைக்கண்ட விவேகி, தம்முள் மாறு படும் வாதிகளின் கொள்கைகள் அத்தனையையும் ஒப்புக் கொண்டு, அவர்களோடு சேர்ந்தும் சேராமலும் இருக்கும் முறையிலிருப்பான்.

ஒப்புக்கொள்ளுதலால் சேர்ந்தும், அவர்கள் வரிசை யில் நின்று வாதாடாமையால் சேராமலும் இருப்பான். அன்றி ஒவ்வொருவரும் தமக்கமைந்த சமயநெறியில் நின்று, மென்மேலும் ஆராய்ந்து உய்யும் நெறியைத் தாமா கவே கடைப்பிடிக்கும் முறையிலும் இருப்பான். அதுவே உண்மையைக் கண்டோன் இருக்கும் முறையில் இருத்த லாம்.

★

மதமாற்றம் என்ற வார்த்தை உண்மைச் சமயியின் ஏட்டில் இல்லாதது. அவ்வாறே தாமாக மாறுதற்குத் தடை யும் அங்கே கிடையாது.

★

யானை கண்ட குருடர் கதை பிரசித்தமானது. கண் ணுள்ளவன் குருடரை நிந்திப்பதில்லை. மேலும் தடவி உண்மை காணவழி செய்வான்.

★

"ஒன்றோடொன்று மாறுபடும் சமயம் அத்தனையும் இருப்பது நீதி" என்று ஒப்புக்கொள்வது உண்மைச் சம யத்தின் அடிப்படைத் தத்துவம்.

ஒப்புக்கொள்ளுவதால் எல்லாச் சமயமுமாய், அதே சமயத்தில் வாதாடாது, அவற்றின் வேறுமாயிருப்பது தான் இணையில்லாமையாகிய அதன் தனிச்சிறப்பு.

★

"செப்பரிய சமயநெறி யெல்லாந் தன்றன்
றெய்வமே தெய்வமெனுஞ் செயற்கையான
அப்பரிசா ளருமஃதே பிடித்தா லிப்பா
லடுத்தநூல் களும்விரிந்தே யநுமானாதி
ஒப்பவிரித் துரைப்ப ரிங்ஙன் பொய்மெய் யென்ன
வொன்றில்லையொன் றெனப்பார்ப்ப தொவ்வா தார்க்கும்
இப்பரிசாஞ் சமயமுமா யல்ல வாகி
யாதுசம யமும்வணங்கு மியல்ப தாகி."

"......................மௌன மோலி
அயர்வறச்சென் னியில்வைத்து ராசாங் கத்தில்
அமர்ந்தது வைதிகசைவம் அழகிது...................."

என்பன தாயுமானவர் வாக்குகள்.

★

'இப்பரிசாஞ் சமயமுமாய் அல்லவாகி' என்பதனால் உண்மைச் சமயத்தின் இலக்கணமும், 'மௌனமோலி' என்பதனால் அவ்விலக்கணம் வைதிகசமயத்துக்கே பொருந்துமாறும் காட்டியவாறும்.

'மௌனமோலி' ஒன்றோடொன்று மாறுபடுஞ் சமயங்களோடு தான் மாறுபடாதிருப்பதன் அறிகுறியாம்.

இவ்வாற்றால், இணையிலா இந்துமதம் வைதிகசைவமே என்பது பெறப்பட்டவாறும்.

'ஓது சமயங்கள்' என்ற சித்தியார்ப் பாட்டில் மேற்காட்டிய கருத்துக்களைக் காணலாம்.

★

ஒரு நல்ல உதாரணம்:-

சென்ற நூற்றுண்டில் மதமாற்றத்துக்கென்றே பாதிரிமார் படையெடுத்து வந்தவர்கள்; அவர்களுள் ஒருவர் பேர்சிவல். பெரும் படிப்பாளி. அவர் கேள்விப்படி பைபிளை நல்ல தமிழில் அமைத்துக் கொடுத்தார் நாவலர். அதே சமயத்தில் மதமாற்றத்துக்குப் பெருநெருப்பாயுமிருந்தார் நாவலர்.

கிறிஸ்தவர் ஒருவரைச் 'சைவத்துக்கு வா' என்று நாவலர் கேட்டதில்லை. தத்தம் சமயநெறியில் நிற்பவர்களுக்குப் பெருமதிப்புச் செய்தார் நாவலர்.

நாவலரின் நடைமுறை பேர்சிவலின் சிந்தனையில் பதிந்தது. அதனுல் பாதிரி உத்தியோகத்தில் உவர்ப்புண்டானது. தம்மிடம் ஆங்கிலம் படிக்க வந்த நாவலரைத் தம்மனத்துள் தமக்குக் குருவாக்கிக் கொண்டார் பேர்சிவல்.

நாவலர், பேர்சிவலைச் சைவத்தை அநுட்டிக்க வேண்டும், தீக்ஷை பெறவேண்டும், சிவ வேடம் பூண வேண்டும், என்று போதித்தது கிடையாது.

பேர்சிவல் தாமாகவே ஓர் அபரசாக்கியராய்க் காலங் கழித்தார்.

"சைவசித்தாந்தத் துண்மையை அறிந்த சில பாதிரிமார்களுக்கு உட்பற்றுச் சைவசமயத்தினிடத்தேயாம். அப்பாதிரிமார்கள் நமது பெரியபுராணத்துச் சாக்கியநாயனர் போலக் காலம் விட்டார்கள்; விடுகின்றுர்கள்; விடுவார்கள்" என்பது நாவலர் எழுதிய 'யாழ்ப்பாணத்துச் சமயநிலை' யிற் கண்டது.

# சைவம் பிரகாசிக்க!

— பண்டிதை த. வேதநாயகி —

"பிரமமே என்னிடம் பிரகாசித்தருள்வாய். ஒளியைத் தருபவன் நீயே. என்னிடம் பிரகாசித்ததற்காக உன்னைப் போற்றுகின்றேன்" என்றிவ்வாறு வேத ரிஷிகள் கானம் பண்ணுகின்றார்கள். பிரமமே, முக்கண்ணனே உனக்கு முன்னும் பின்னும் நமஸ்காரம் என்று நமஸ்காரத்தால் பூஜை செய்கிறார்கள். (பிரமம் சிவபெருமானே என்ற உண்மையைப் பிடித்துக்கொள்ள வேண்டும்).

★

வேத மத்தியிலே பிரகாசிப்பது சிவமூலமந்திரம். வேத நான்கினும் மெய்ப்பொருளாவது நாதன் நாமம், ஆகிய சிவமூல மந்திரம் என்பது சம்பந்தர் தமிழ்.

சிவசம்பந்தமுற்றவன் சைவன். சிவசம்பந்தமான ஒழுக்கம் சைவம் ஆகும்.

★

சைவநெறி நிற்பவன் சைவசமயி. ஊருக்கு, உலகத்துக்கு, அரசுக்கு உத்தமமான பிரஜை. அவனே தன் சூழலைப் பிழை புகுதாமற் காக்குங் கடனை நிறைவேற்ற வல்லவன்.

★

"ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தின் பொருளையறிந்து சிவபெருமான் ஆண்டவன், தான் அடிமை என்னும் முறைமையை மனத்தகத்தே வழுவாமல் இருத்தி, அதனை விதிப்படி மெய்யன்போடு செபித்துக்கொண்டு வரின், விறகினிடத்தே அக்கினி பிரகாசித்தாற் போல ஆன்மாவினிடத்தே சிவபெருமான் பிரகாசித்து, மும்மலங்களும் நீங்கும்படி ஞானானந்தத்தைப் பிரகாசித்தருளுவர்."

ஸ்ரீ பஞ்சாக்ஷர செபத்தாற் பயன் என்னை என்ற பிரச்சனையை எழுப்பி, மாணாக்கனைப் பற்றிக்கொண்டு நாவலர் விடை வழங்கி உபதேசம்பண்ணிய வசனமே மேலே அமைந்து நிற்பது.

பிரமமே என்னிடம் பிரகாசித்தருள்வாய் என்று வேத ரிஷிகள் பிரார்த்திப்பதை முதலிலே கண்டோம். சைவவினா விடை இரண்டாம் புத்தகத்திலே நாவலர் உபகரித்த உண்மை அந்த மகரிஷிகளின் பிரார்த்தனையோடு இயைந்து நிற்பதைக் காணும்பொழுது மெய்யுணர்வை நாடும் உள்ளம் துள்ளி விளையாடுமே!

சிவபெருமானிடத்து அன்பு எப்படி விளையும் என்பது வினா. விடை வருகின்றது:

"பசுக்களாகிய நம்முடைய இலக்கணங்களையும், நம்மைப் பந்தித்த பாசங்களின் இலக்கணங்களையும் எத்துணையும் பெரிய சிவபெருமான், எத்துணையுஞ் சிறிய நமக்கெல்லாம் இரங்கி எளிவந்து ஓயாது உபகரிக்கும் பெருங்கருணையையும் இவ்வியல்பின் அநந்த கோடியில் ஒரு கூறுயினும் உடையவர் பிறர் ஒருவரும் நமக்கில்லாமையையும் இடையறுது சிந்திக்க நமக்கு அச்சிவபிரானிடத்து அன்பு விளையும்"

இந்தப் பரம இரகசியத்தை நமக்குத் தந்தாரே நாவலர்!

★

"எங்குஞ் சைவம் பிரகாசிக்க" என்பது நாவலர் எழுச்சி. அந்த எழுச்சியின் வசப்பட்ட பெருமையுடையவர் கந்தப்பிள்ளை என்னும் நன்மகனுர். அவர் தம்முடைய சூழல் முழுதும் சைவம் பிரகாசிக்கச் செய்தல் தாம் சிவபெருமானுக்குச் செய்யும் தொண்டு ஆகும் என்று உட்கொண்டார். ஒரு வித்தியாசாலையைத் தாபித்து பாலப் பருவத்திலேயே "சைவமாஞ் சமயஞ்சாரும்" பாக்கியப்பயனை ஒவ்வொருவருக்கும் வழங்குவது சிறந்ததொரு பயன் என்று நாவலர் வழிநின்று சிந்தித்தார். வேலணைச் சைவப்பிரகாச வித்தியாசாலையின் ஸ்தாபகர் ஆனுர்.

3

★

சைவப்பிரகாச வித்தியாசாலை விழாவிற் பங்குகொள்ளும் அன்பர் ஒவ்வொருவரும் வேலணையிலும், அயற்கிராமங்களிலும், தீவுத்தொகுதி முழுவதிலும், அப்பாலும். அப்பாலுக்கப்பாலும் சைவம் பிரகாசித்துக் கொண்டிருக்குமாறு செய்து சிவபெருமானுடைய திருவருளை மேலும் மேலும் பெறுவார்களாக. புத்திரர், பௌத்திரர்க்கும், அவர் வழிவருஞ் சந்ததியினர்க்கும் சைவத்தைக் காப்பாற்றிக் கொடுப்பது ஒன்றுதான் கொடை. அதுவே கடன். திருஞானசம்பந்தர் திருவவதாரஞ்செய்து காத்துத்தந்த "பெருஞ் செல்வ"த்தைக் காத்து, சந்ததியினர்க்கு வைத்துச் செல்வது ஒவ்வொருவர்க்குங் கடன். நாளைக்கு நாமே பிறந்தால் நமக்கு வேண்டுமே சைவத்துணை.

(நன்றி: வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலை நூற்றாண்டு விழா மலர். மேலும் சில பகுதிகள் அடுத்து வெளிவரும்)

1981ம் ஆண்டு மார்ச்சுமாதம் 17ந்திகதி எடுக்கப்பெற்ற குடிசன மதிப்பீட்டின்படி இலங்கையின் முழுச் சனத்தொகை 150 இலட்சமாகும். இது 1971-ம் ஆண்டில் உள்ளதைவிட 17 நூற்றுவீதம் கூடுதலாகும். மொத்தச் சனத்தொகையில் சைவப்பெருமக்களின் பங்கு எவ்வளவு என்பதை அடுத்த இதழிற் காண்போம்.

★

அதிர்ஷ்டம் என்பது :

நன்கு பயன்படுத்தப்பெற்ற சந்தர்ப்பம் ஆகும்

வெற்றி என்பது :

அதிர்ஷ்டத்தைப் பலன்தரச் செய்த முயற்சியாகும்

- சுவாமி சின்மயானந்தா -

# நம்பினர் நன்மை பெறுவர்

- ஆர். வி. கொழும்பு -

நம்வாழ்வில் நடைபெறும் பற்பல நிகழ்ச்சிகளால் இறை நம்பிக்கை கூடுகிறது. உறுதி பெறுகிறது எனலாம். நிகழச்சி பெரிதாக இருக்கலாம். அல்லது சிறிதாக இருக்கலாம். நம்பிக்கை கொள்ளுவதே பிரதானம்.

உதாரணமாக எனது வாழ்வில் ஏற்பட்ட ஒரு சிறு சம்பவத்தைக் கூற விரும்புகிறேன்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் கொழும்புக்கு பிரபல வெளிநாட்டு கிரிக்கெட் கோஷ்டியினர் வருகைதந்து இருந்தனர். அவர்களது ஆட்டம் இலங்கைக் கோஷ்டியுடன் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

ஓரளவு குறுகிய கால முன்னறிவித்தலுடன் நடைபெற்ற விளையாட்டுப் போட்டி (மாட்ச்) ஆதலால் நுழைவு சீட்டுகளை முன்னதாகவே வாங்கிக் கொள்ளும் சந்தர்ப்பமும் குறைவு. ஆதலால் விளையாட்டுத் தொடங்கவுள்ள நாளில் காலையிலேயே என் இரு மக்களுடன் டிக்கெற் பெற வரிசையில் நின்றேன்.

கூட்டமோ மிகப்பெரியது. எனவே வரிசையில் எங்கள் இடமும் மிகத்தூரத்தில். நிலைமையை நன்கு ஆராய்ந்து பார்க்கும்பொழுது மிகுந்த நம்பிக்கையுடன் இருக்கும் சாத்தியமில்லை. நான் என் மனதிற்குள்ளேயே விநாயகரைத் தோத்திரித்துக் கொண்டிருந்தேன். "அப்பனே உன் செயலால் அன்றி இன்று 'மாட்ச்' பார்க்க இயலாது நீயே கதி" என்ற ரீதியில் என்னைச் சரணாகதி ஆக்கிக் கொண்டிருந்தேன்.

என்ன ஆச்சரியம்! விளையாட்டு மைதானத்திற்குள்ளிருந்து ஒருவர் என்னைக் கைகாட்டி அழைத்தார். நான் வரிசையில் எனது மக்களைக் கவனமாக நிற்கச்செய்து

விட்டு அழைத்தவரை நோக்கிச் சென்றேன். அவருக்கு அருகில் நான் சென்று நின்றபோழுது கம்பிவேலி மட்டும் எங்களைப் பிரித்தது: அவர் கூறினர் "என் நண்பர்கள் இருவர் வருவதாகக் கூறியிருந்தபடியால் இரு டிக்கட்டுக்களைக் கூடுதலாக வாங்கினேன். 'மாட்ச்' தொடங்க இன்னும் சிறிது நேரமே இருக்கிறது. அவர்களைக் காணவில்லை. ஆதலால் இந்த டிக்கெட்டுகளை நீங்கள் எடுத்துக்கொண்டு உரியபணத்தைத் தாருங்கள்." என் காதுகளை என்னல் நம்ப முடியவில்லை. இவ்வளவு பெரிய கூட்டத்தில் அந்த அன்பர் என்னைத் தெரிவு செய்தது ஏன்? உரிய விலையைவிடக் கூடுதலாக இரு மடங்கு, மும்மடங்கு எனப் பணம் பெறும் நிலை இருந்தும் ஏன் கூடுதலான விலை கேட்காமல் அதே விலைக்கு டிக்கெட்டுக்களை விற்க முன்வருகிருர்.

எனது தோத்திரம் நற்பலனைத் தந்துவிட்டது. எனது இறைநம்பிக்கையும் உறுதிபெற்றது.

நம்பிக்கையுடன் நாம் இருப்போமாகில் உலகியல் வாழ்விலும், ஆன்மீகவாழ்விலும் அவன் அருளால் அரிய காரியங்கள் நிகழ்ந்த வண்ணம் இருக்கத்தான் செய்கின்றன என்பதை உணர்வோம்.

— ★ —

உ

## சனீஸ்வரன் தோத்திரம்

நீலாஞ்ஜன சமாபாசம்,
ரவிபுத்திரம், யமாக்ரஜம்:
சாயாமார்த்தாண்ட சம்பூதம்:
தம் நமாமி. சனைஸ்சரம்॥

விதி:

தினசரி இதை மனனம்பண்ணி தோத்திரம் செய்து வந்தால் சனீஸ்வரனல் பீடிக்கப்பட்ட கஷ்டங்கள் நீங்கும்.

கண்டிப்பு:

அட்டமசனி உள்ளவர்கள், ஏழரைச்சனி உள்ளவர்கள் கண்டிப்பாகத் தோத்திரம் செய்ய வேண்டியது. பலன் உண்டு.

# ✶ சைவசித்தாந்தத்திற்கு உரிய தனிச்சிறப்புக்கள் ✶

புலவர் சித்தாந்த வித்தகர் முரு. பழ. இரத்தினம் செட்டியார் (மூலார்)

சைவசமய அடிப்படை உண்மைகளை விவரிக்கின்ற சாத்திரப் பகுதி 'சைவசித்தாந்தம்' என்று வழங்கப்படும், வடமொழியில் உள்ள சிவாகமங்கள் சைவசித்தாந்தத்திற்குரிய முதனூல்கள் என்று கூறப்படுகின்றன. ஆனால் அவ்வாகமங்களிற் பல இப்பொழுது கிடைக்கவில்லை. கிடைத்துள்ள ஆகமங்களில் சைவசித்தாந்த உண்மைகள் வரையறையுடன் காணப்படவில்லை. பிரம்மசூத்திரத்துக்கு உரையாக எழுந்த நீலகண்டபாடியம் சைவபாடியமேயாயினும் அது சிவாத்துவித சைவத்தை உணர்த்துகின்றதே அன்றிச் சைவசித்தாந்தத்தை உணர்த்தவில்லை. சிவஞானபோதத்திற்கு உரையாக வடமொழியில் எழுதப்பட்ட சிவாக்கிரபாடியம் கூடச் சைவசித்தாந்தத்தை உணர்த்தவில்லை. ஆகவே வடமொழியில் சைவசித்தாந்தத்திற்கு ஆதார நூலாக எதுவும் இப்பொழுது இல்லை என்பது தெளிவு. இன்று உலகத்துக்குச் சைவசித்தாந்தத்தை உணர்த்தும் ஆதார நூல்கள் தமிழ் மொழியில் மட்டுமே உள்ளன. இது தமிழ் ஆராய்வார் அனைவரும் சிந்திக்கவேண்டிய ஒன்றாகும்.

இறைவனைப் போலவே உயிர்களும், உயிர்களைப் பிணித்துள்ள ஆணவம், கன்மம், மாயை என்னும் மலங்களும் யாராலும் படைக்கப் படாமல், அநாதி நித்தியமாக என்றும் உள்ளவை என்பது சைவ சித்தாந்தக் கொள்கையாகும். 'பதியினைப்போல் பசு, பாசம் அநாதி' என்று திருமந்திரத்தால் திருமூலர் அருளிச் செய்திருக்கிறார். திருமூலர். காலத்தால் ஞானசம்பந்தர் முதலிய சமயகுரவர்க்கும் மெய்கண்டார் முதலிய சந்தான குரவர்க்கும் முற்பட்டவர். இதனால் சைவசித்தாந்தம் தமிழகத்திற்கு மிகப் பழைமையான ஒன்று என்பது புலனாகும்.

## நாத்திகர் எழுப்பும் கேள்விக்குப் பதில்

இறை, உயிர், தளை ஆகிய மூன்றும் என்றும் உள்ளவை என்னும் கொள்கை இந்திய நாட்டிற்கு வெளியே தோன்றிப் பரவியுள்ள ஆத்திக சமயங்களிற் காணப்படவில்லை. அவை இறைவனே உயிர்களையும் உண்டாக்கினன் என்னும் கொள்கையுடையனவாக இருக்கின்றன.

இறைவன் ஒருவன் உண்டு என நிலைநாட்டுவதில் ஏனை ஆத்திக சமயங்களினும் பார்க்கச் சிறந்த காரணங்களைச் சைவசித்தாந்தம் காட்டியுள்ளது.

'உலகை எந்த உயிரும் படைக்கக்கூடிய ஆற்றல் உள்ளதாக இல்லை; எனவே இவ்வுலகைப் படைத்த கடவுள் உண்டு' என்பதே கடவுள் உண்மையை நிலைநாட்டுவதற்கு ஆத்திக சமயங்கள் காட்டும் காரணமாகும்.

'உலகைப் படைத்தவர் கடவுள் என்றால் கடவுளைப் படைத்தவர் யார்? கடவுளை யாரும் படைக்கவில்லை என்றால், உலகையும் யாரும் படைக்கவில்லை என்று ஏன் கொள்ளக்கூடாது? என நாத்திகக் கொள்கையினர் கேட்கின்றனர். இதனையே முதற் கேள்வியாகச் சைவ சித்தாந்தம் எடுத்துக்கொண்டு, விடை கூறுகிறது.

'உலகத்துப் பொருள்கள் அனைத்தும் அழியும் தன்மையுடையன வாக இருக்கின்றன. அழியாத பொருள்களாக இருந்தால், அவை என்றும் உள்ளவை என்று கூறிவிடலாம். அழியக் கூடியவையாக அவை இருப்பதால் அவற்றிற்குத் தோற்றமும் இருந்தே ஆகவேண்டும். அறிவில்லாத சடப்பொருள்களாகிய அவை தாமாகவே தோன்றியிருக்க முடியாது. அவற்றைத் தோற்றுவிக்க வேறொரு பொருள் வேண்டும். அந்தப் பொருளும் அழியக்கூடியதாக இருந்தால், அதனைத் தோற்று விக்க மற்றொரு பொருள் வேண்டும். இங்ஙனம் ஆய்ந்துகொண்டே போனால், இறுதியாக அழியாத ஏதோ ஒரு பொருள் இருந்தே ஆக வேண்டும் என்பதும், அங்ஙனம் இல்லை என்றால், அழியக்கூடிய இப் பொருள்கள் தோன்றக் காரணம் இல்லை என்பதும் புலனாகும். அந்த அழியாத பொருளே கடவுள் என்றும், அது பேரறிவும் பேராற்றலும் அழியாத தன்மையும் உடையதாக இருக்கவேண்டுமாதலால், அதனைத் தோற்றுவிக்கவோ, இயக்குவிக்கவோ யாரும் வேண்டியதில்லை என்றும் இதனாலேயே உலகம் படைக்கப்பட்ட பொருள் என்றும், ஆனால் இறைவனே படைக்கப்படாத பொருள் என்றும் கொள்கிறோம்; சைவ சித்தாந்தம் இதற்கு விடை கூறுகிறது, இதனை

> 'அவனவ ளதுவெனு மவைமூ வினைமையில்
> தோற்றிய திதியே யொடுங்கிமலத் துளதாம்
> அந்த மாதி யென்மனார் புலவர்'

என்னும் சிவஞானபோத முதற்சூத்திரத்தாலும் இதற்குச் சிவஞான சுவாமிகள் எழுதியுள்ள உரையாலும் நன்கறியலாம்.

## உலக மூலகாரணப் பொருளாய் இயற்கை

'உலகத்துப் பொருள்கள் அழியக்கூடியனவாகும். ஆனால் உலக மூலகாரணப் பொருளாகிய இயற்கை என்றும் அழியாதது; இயற்கை யினுள் ஆக்க ஆற்றலும் அழிக்கும் ஆற்றலும் இயல்பாகவே உள்ளன. இதனால் உலகம் தோன்றி ஒடுங்குகிறது. இந்த இயற்கை நிகழ்ச்சிக்கு இறைவனைக் காரணமாகக் கூறுதல் பொருந்தாது, என நாத்திகர் மேலும்

விஞவக் காண்கின்ருேம். இதற்கும் சைவசித்தாந்தம் தக்க விடை கூறியுள்ளது.

'இயற்கையினுள் அந்த ஆற்றல் வலி கூடியதாக இருக்குமாஞல்' அழிக்கும் ஆற்றலே அது செயல்பட விடாது; அது போலவே அழிக்கும் ஆற்றல் வலி கூடியதாக இருக்குமாஞல், ஆக்க ஆற்றலேச் செயல்பட விடாது. இருவகை ஆற்றலும் சமவலியுடையனவாக இருக்குமாஞல் இருவகைச் செயல்களுமே நடைபெருமற் போய்விடும். ஆஞல் உலகில் தோன்றுதல், அழிதல் ஆகிய இரண்டும் நிகழக் காண்கின்ருேம். எனவே, ஒன்றுக்கொன்று முரணுன இவை இரண்டும் இயற்கையினுள் அமைந்து கிடக்க இடமில்லே. அறிவுடைய ஒரு பொருளே அறிவில்லாத இயற்கையினுள், இவ்விருவகை இயக்கங்களேயும் தேவைக்கேற்றவாறு தோற்றுவிக்க வேண்டும். ஒன்றுக்கொன்று முரணுன இவ்விருவகைச் செயல்களும் விகாரமாகுமே அல்லாமல் இயற்கையாகமாட்டா' எனச் சைவசித்தாந்தம் விடை பகர்கின்றது. இதனே

''இயல்புகாண் டோற்றி மாய்கை
யென்றிடி னியல்பி னுக்குச்
செயலதின் றியல்பு செய்தி
செய்தியே லியல்ப தின்ரும்......''

எனச் சிவஞானசித்தியார் கூறுவதிலிருந்து அறியலாம். இங்ஙனம் பகுத்தறிவுக் கொள்கையினர் ஏற்குமாறு இறை உண்மையை நிலே நாட்டுவது சைவசித்தாந்தத்திற்கேயுரிய தனிச்சிறப்புக்களுள் ஒன்ருகும்.

இயற்கையினுள் தோன்றுதல், அழிதல் ஆகிய நிகழ்ச்சிகளேத் தோற்றுவிப்பவன் இறைவன் எனச் சைவசித்தாந்தம் கூறினும், இயற்கையை நாத்திகர் கூறுவதுபோல யாராலும் படைக்கப்படாத அநாதி நித்தியப் பொருளாகவே அது கொள்கிறது. மாயை என்னும் பெயரால் அதனே அது குறிப்பிடுகிறது. 'உள்ளதே தோற்றும்' என்னும் சக்காரிய வாதத்தைச் சைவசித்தாந்தம் உடன்படுகிறது.

## ஒருவித தேவையும் அற்றவன் இறைவன்

இறைவன் ஒரு தேவையும் அற்றவன்; எனவே அவனுக்காக, அவன் எதனேயும் உண்டாக்கிக் கொள்ளவேண்டிய அவசியம் இல்லே. உலகில் அறிவுடைப் பொருள்களாகிய உயிர்களேயும், அறிவற்ற சடப்பொருள்களேயும் நாம் காண்கின்ருேம். சடப்பொருள்களே உயிர்கள் பயன்படுத்தவும் காண்கின்ருேம்; இதஞல் அவை இன்ப, துன்ப அநுபவங்களே எய்தி அறிவு விளக்கம் பெறுவதையும் காண்கின்ருேம். சில சமயம் அறிவு விளங்கியும், சில சமயம் அறிவு மடங்கியும் உயிர்கள் திணறுவதை நோக்கும்போது அவற்றின் அறிவு ஏதோ ஒரு பொருளால் மறைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்றும், அம்மறைப்பினின்றும் விடுபடவே

அவை செயலாற்றுகின்றன என்றும் கொள்ளவேண்டியிருக்கிறது. இம் மறைப்புப் பொருளை 'ஆவணமலம்' எனச் சைவசித்தாந்தம் குறிப்பிடுகிறது. உலக வாழ்வால் உயிர்கள் அறிவு விளக்கம் பெறுகின்றன. எனவே, அவை ஆணவமலத் தொடக்கினின்றும் விடுபட்டு அறிவு விளக்கம் பெறுவதற்காகவே மாயையினின்றும் உடல்களும் உலகத்துப் பொருள்களும் தோற்றுவிக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பது புலனாகிறது.

ஒரு தேவையும் அற்றவனாதலால், இறைவன் உயிர்களைப் படைத்திருக்க மாட்டான். இதனால் உயிர்களும் இறைவனைப்போலவே யாராலும் படைக்கப்படாத அநாதிநித்தியப் பொருள்களாகவே இருக்க வேண்டும். உயிர்களின் அறிவை மறைக்கும் ஆணவ மலத்தையும் கருணையாளனாகிய இறைவன் படைத்திருக்க மாட்டான். எனவே அதுவும் அநாதி நித்தியப் பொருளாக இருத்தல் வேண்டும்; உயிர்களும் அநாதியே அதன் மறைப்புக்குள்ளாகி இருத்தல் வேண்டும். உயிர்களின் அறிவை மறைக்கும் ஆணவமலத்தை இறைவன் படைத்திருக்க மாட்டான் எனக்கொள்ளும்போது அறிவு விளங்கத் துணைசெய்யும் இயற்கையாகிய மாயையையும் இறைவன் படைத்திருக்க மாட்டான் என்றே கொள்ளவேண்டும். ஆனால், அறிவற்ற சடப்பொருளாகிய மாயைதானே உலகாகவும், உயிர்கள் பொருந்துகின்ற உடலாகவும் மாற இயலாது. எனவே, இறைவனும், உயிர்களும், ஆணவமலமும், மாயையும் அநாதி நித்தியப் பொருள்களாக இருப்பினும், உயிர்கள் ஆணவமல மறைப்பினின்றும் விடுபடுவதற்காகவே இறைவன் தனக்கென எந்தத் தேவையும் இல்லாதிருந்தும் கருணையால் மாயையினின்றும் உடலையும், உலகையும் படைத்தளித்திருக்கின்றான் என உலகத் தோற்றத்திற்குச் சைவ சித்தாந்தம் காரணம் காட்டுகிறது. ஆத்திக சமயங்கள் எதுவும் இங்ஙனம் உலகத் தோற்றத்திற்குக் காரணம் காட்டவில்லை. இஃதும் சைவ சித்தாந்தத்திற்குரிய தனிச்சிறப்பாகும்.

உயிர்கள் அநாதியிலே ஏன் ஆணவ மறைப்புக்குள்ளாக வேண்டும்? எல்லாம் வல்ல இறைவன் ஏன் அதனைத் தடுத்திருக்கக் கூடாது? ஆணவ மலத்தையே ஏன் இல்லாமல் செய்துவிடக் கூடாது? இக்கேள்விகளுக்கும் சைவசித்தாந்தம் விடை அளித்துள்ளது.

## அநுபவத்தால் உரம் பெறும் தன்மை

உயிர்கள் அறிவுடைப் பொருள்களாக இருப்பினும் அநுபவத்தால் உரம்பெறும் தன்மையுடையனவாகவே அவை இருக்கின்றன. அறிவுடைப் பொருள்கள் என்றால், அவற்றிற்கெனத் தனியே இச்சையும் செயலும் இருத்தல் வேண்டும். அநுபவமின்மை காரணமாக, அவை ஆணவமலத்தை அநாதியே இச்சித்துப் பற்றியுள்ளன. இவ்விச்சையை இறைவன் தன் வலிமையால் தடுத்து விடலாம். ஆனால் அஃது இறைவன் தன் வலிமையை நிலைநாட்டிய செயலாக இருக்குமே அன்றி,

உயிர்களின் அறிவிற்கு நலம் செய்த செயலாக இருக்காது. அறிவுடைப் பொருள்களுக்கு அவற்றின் இயல்பறிந்து அநுபவத்தை ஊட்டினுல்தான் நலம் பெறும். அநுபவத்தால் நலம்பெறும் தன்மைவாய்ந்த உயிர்களின் அறிவை அநுபவம் இல்லாமலே நலம் பெறுமாறு மாற்றியமைத் தால் அப்புறம் அவை அந்த உயிர்களாக விளங்க மாட்டா. இது புதிய உயிர்களை உண்டாக்கியதாகவே முடியும். புதிய உயிர்களை உண் டாக்க வேண்டிய அவசியம் இறைவனுக்கு இல்லை. அநாதியே இருக்கின்ற உயிர்களுக்குக் கருணை காரணமாகவே அவன் நலம் செய் யக் கருதுகிறுன். அநாதியே யாராலும் படைக்கப்படாமல் என்றும் உள்ள உயிர்களின் தன்மைகளுக்கு இறைவன் பொறுப்பாளியாக மாட் டான். ஆகவே அவைகளின் தன்மைகளுக்கு ஏற்ப அவை அநுபவம் பெறவேண்டும் என்பதற்காகவே, அநாதியே அவை ஆணவமலத்தைப் பற்றுவதை அவன் தடை செய்யவில்லை. அநுபவத்தால் நலம் பெறும் தன்மை உடைய உயிர்களுக்கு ஆணவமலத்தை இல்லா மல் அழித்து விடுவதாலும் பயனில்லை. இங்ஙனம் சைவசித்தாந்தம் தான்கொண்ட முடிபிற்கு விடை அளிக்கின்றது. எந்தக் கேள்விக்கும் தயங்காமல் விடை அளித்துச் செல்கின்ற சிறப்பு சைவசித்தாந்தம் ஒன் றிற்கே உரியதாகக் காணப்படுகின்றது.

அநாதியே உயிர்கள் ஆணவமலத்தைப் பற்றியமையே 'மூலகன்மம்' எனப்படும். இதுபற்றிச் சைவசித்தாந்திகளுக்கிடையே கருத்து வேறு பாடுண்டு. 'அநாதியே மலத்தைப் பற்றுதல் உயிரின் வினையாய்' எனச் சிவஞானசுவாமிகள் கூறுவதிலிருந்து மூலகன்மம் என்பது உயிர் களின் அநாதியே ஆணவமலத்தைப் பற்றிய செயலேயெனக் கொள்ள வேண்டியிருக்கிறது. 'பற்றுதல்' என்னும் மூலகன்மமாகிய செயலே உயிர்கள் உடல் பெற்ற பின்னர் விருப்பு வெறுப்புக்களை விளைவிக்க அவற்றின் காரணமாக அவை நல்வினை தீவினைகளைச் செய்கின்றன. இதனுலேயே கன்மத்தையும் அநாதியெனச் சைவசித்தாந்தம் கொள் கிறது. 'பற்றுதல்' - மூலகன்மம்' 'விருப்பு வெறுப்புக்கள் -சூக்குமகன் மம்' 'நல்வினை தீவினை - தூலகன்மம்' என அறிதல் வேண்டும்.

## உலகும் உயிரும் பொய்த்தோற்றம்

இறை, உயிர், ஆணவம், கன்மம், மாயை ஆகியவை அநாதி என்னும் கருத்து இந்திய நாட்டிற்குள் தோன்றிப் பரவியுள்ள சம யங்களுக்கும் சித்தாந்தங்களுக்கும் புதுமையானதன்று. ஆனுல் அப் பொருள்கள் அநாதி என்பதற்குச் சைவசித்தாந்தம் கூறுகின்ற கார ணங்களை ஏனை இந்தியநாட்டுச் சமயங்களும் சித்தாந்தங்களும் கூற வில்லை. அவை நூன்முறை பிறழாது காரணம் காட்டிப் பொருள் களை அநாதியென நிறுவிய பெருமை சைவசித்தாந்தத்திற்கே உரிய தாகும்.

இறைவன் முழு வியாபகமும், முற்றறிவும், அந்தமில் இன்பமும் உடையவன் என்பதைச் சங்கரர் வேதாந்தமும், இராமானுசரின் விசிட்டாத்துவிதமும், மாத்துவரின் துவிதமும், சைவசித்தாந்தமும் ஒப்புக்கொள்ளுகின்றன.

'இறைவன் முழு வியாபகம் உடையவன் என்றால் இரண்டாவது பொருளுக்கு இடமேது? எனவே இறைவன் ஒருவனே உள்பொருள் உலகும் உயிரும் பொய்த் தோற்றமே' என சங்கரர்வேதாந்தம் கூறுகின்றது. இறைவன் ஒருவனே உள்பொருள் என்றால் உலகுயிராகிய பொய்த் தோற்றம் அவனுக்குத்தானே ஏற்படவேண்டும். எனவே, இறைவனை அறியாமையுடையவன் எனக் கருதவேண்டி வரும். இஃது இறைவன் முற்றறிவுடையவன் எனச் சங்கரர் கொண்ட கொள்கைக்கு முரணாகும்.

'இறைவன் முழு வியாபகம் உடையவன்தான்; உலகும் உயிரும் அவனுக்கு சரீரங்களாகும். அவை சரீரமாக இருப்பதால் இறைவன் வியாபகத்திற்கு இழுக்கில்லை' என இராமானுசரின் விசிட்டாத்துவிதம் கூறுகிறது. குற்றமும் குறையும் துன்பமும் உடைய உலகும் உயிரும் இறைவனுக்குச் சரீரமாக இருந்தால், அவன் அந்தமில் இன்பம் உடையவனாகவும் இருக்கமாட்டான்; குற்றமற்ற சரீரத்தை உண்டாக்கிக் கொள்ளத்தெரியாத பேதையாகவும் அவன் கொள்ளப்படுவான். இஃது இறைவன் முற்றறிவும் அந்தமில் இன்பமும் உடையவன் என இராமானுசர் கொண்ட கருத்துக்கு முரணாகும்.

'இறைவன் வேறு உலகுயிர்கள் வேறு. இறைவன் உலகுயிர்களில் நிறைந்திருக்கிறான்' என்பது மாத்துவர்சித்தாந்தமாகும். உலகுயிர்கள் வேறு என்றால் குற்றமும் குறையுமுடைய உலகும் உயிரும் இறை வியாபகத்துக்குள் நிற்க முடியாமல் அழிந்து போகும். சூரியன் முன் இருள் நிற்க முடியாது. அது போலவே இறை வியாபகத்திற்குள் இவ்வ நிற்க இயலாது. ஆனால் உலகுயிர்கள் நிற்பதைக் காண்கின்றோம். இதனால் இறைவன் வியாபகம் உலகுயிர்களில் இல்லை என்று கொள்ளவேண்டியது வரும். இஃது உலகுயிர்களில் இறைவன் நிறைந்து இருக்கிறான் என மாத்துவர் கொண்ட கருத்துக்கு முரணாகும்.

## ஒரே சமயத்தில் இருவிதமாக நிற்பவன்

சைவசித்தாந்தம் என்ன சொல்கிறது? இறைவன் உலகுயிர்களோடு ஒன்றாயும் வேறாயும் உடனாயும் நிற்கின்றான் என அது சொல்கிறது. இஃதே 'அத்துவிதம்' என வேதத்தில் சொல்லப்பட்டிருக்கும் சொல்லுக்குப் பொருள் என்றும், அது கூறுகிறது.

இறைவன் முழு வியாபகம் உடையவனே; அவன் ஒவ்வொரு பொருளினுள்ளும் நிறைந்து நிற்பதோடு அமையாமல் அந்தந்தப்

பொருளாயும் நிற்கின்ருன். இதனுலேயே, அவை 'வியாபகத்துள் இடம் பெற முடிகிறது. உலகுயிர்கள் இடம்பெறுவதற்காக அவன் கருணை காரணமாக இங்ஙனம் ஒன்ருக நிற்பதால் விகாரம் அடையமாட்டான். உலகோடும் உயிரோடும் அவையாகவே அவன் நிற்பதால் அவனின் முழு வியாபகத்திற்கு இழுக்கில்லாமல் போகிறது. அதே சமயம் இறைவன் இவைகளின் வேருகவும் நிற்கிருன். இதனுல் உலகுயிர் குற்றம் அவனைச் சாராமற் போகிறது. பேராற்றலும் பேரறிவும் வாய்ந்தவனுதலால் அவன் இங்ஙனம் ஒரே சமயத்தில் இரு விதமாக நிற்க முடியும். அவன் முற்றறிவுக்கும் எல்லையில் ஆற்றலுக்கும் இதனுல் சிறப்பேயன்றி இழுக்கில்லை. உலகுயிர்களோடு ஒன்ருகவும் நிற்பதோடு அமையாமல் அவன் உடனுகவும் நிற்பதால் அவை செயல்பட முடிகிறது. இதனுல் இறைவனை விடுத்து, அவை தனியே இயங்க முடியாது என்பதும்' பெறப்படுகிறது,

இறைவன் ஒன்ருயும் வேருயும் உடனுயும் நிற்பான் எனச் சித்தாந்தம் கூறும் கருத்தே, இறைவனின் இலக்கணங்கள் அனைத்திற்கும் பொருந்தியதாக இருக்கிறது. இவற்றுள் ஒவ்வொன்றே கூறும் வேதாந்த விசிட்டாத்துவித — த்துவித சித்தாந்தங்கள் அவன் இலக்கணங்கள் அனைத்திற்கும் பொருந்தியனவாக இல்லை.

சங்கரரின் வேதாந்தத்தையும், இராமானுசரின் விசிட்டாத்துவிதத்தையும், மாத்துவரின் துவிதத்தையும் பார்த்துவிட்டு; மெய்கண்டார் இம்மூவர் கருத்தையும் ஒன்ருகச் சேர்த்து, இறைவன் ஒன்ருகியும் வேருகியும் உடனுகியும நிற்பான் எனக் கூறியருப்பதாகச் சிலர் கருதுகின்றனர். இது முழுப்பிழையாகும்.

சங்கரர்க்குப் பின் வந்தவர்களே இராமானுசரும் மாத்துவரும் என்பதை யாரும் மறுக்க முடியாது. சங்கரர் தம் நூலில் ஞானசம்பந்தர் திருப்பாலுண்ட நிகழ்ச்சியைக் கூறியிருக்கிருர். ஆகவே சங்கரர்க்கு முற்பட்டவர் ஞானசம்பந்தர் என்பதில் சந்தேகமில்லை. ஞானசம்பந்தர் தாம் பாடிய தேவாரத்தில், ' தானுய் வேருய் உடன் ஆனுன் இடம் வீழிம்மிழலையே' எனத் திட்டவட்டமாகக் கூறியருளியிருக்கிருர். ஆகவே சங்கரர்க்கும் இராமானுசர்க்கும் மாத்துவர்க்கும் முந்தியே இறைவன் ஒன்ருயும் வேருயும் உடனுயும் நிற்பான் என்னும் கருத்தைச் சைவசித்தாந்தம் கூறியிருக்கிறது என்பது தெளிவு. இங்ஙனம் இறைவனுக்கும் உலகுயிர்களுக்கும் உள்ள தொடர்பைச் சைவசித்தாந்தம் தனக்கே உரிய தனிச்சிறப்புடன் கூறியிருப்பது அறிந்தின்புறத்தக்கது.

## பேரின்பத்துக்கு வழி செய்யும் பத்திநெறி

இறைவனை அடைவதற்குரிய நெறி பத்தி நெறியே என்று சைவசித்தாந்தம் கூறுகிறது. சரியை, கிரியை, யோகம், ஞானம். என்னும்

நான்கையும் பத்திநெறியை அடிப்படையாக வைத்தே அது கூறியிருக்கிறது. விசிட்டாத்துவிதமும் துவிதமும் பக்திநெறி பற்றிச் சிறந்த கருத்துகளைக் கூறியுள்ளன. வேதாந்தமும் இதில் பின் வாங்கவில்லை. வேறுபாடுகள் பல இருப்பினும் அடிப்படையில் பெரிய மாற்றம் இல்லை என்றே சொல்லி விடலாம். ஆனால் முத்திநிலை பற்றிச் சைவசித்தாந்தம் தனக்கே உரிய சில க்ருத்துக்களைக் கொண்டிருக்கிறது. முத்தியிலும் இறை, உயிர், தளை ஆகிய மூன்றும் உண்டு என்பது அதன் கருத்தாகும். மலம் வலிகெட்டு நிற்குமென்றும், உயிர் பேரின்பத்தை நுகரும் என்றும், இறைவன் பேரின்பத்தை வழங்குவான் என்றும் அது கூறுகிறது.

முத்தியில் இறைவனும் உயிரும் ஒன்றா? வேறா? ஒன்று என்றால் பேரின்பத்தை அநுபவிப்பது யார்? வேறு என்றால் முழு இன்பமும் கிட்ட இடமில்லை. இதற்குச் சைவசித்தாந்தம் என்ன சொல்கிறது

'ஏகமாய் நின்றே யிணையடிக ளொன்றுணரப்
போகமாய்த் தான்விளைந்த பொற்பினன்-ஏகமாய்
உள்ளத்தின் கண்ணாளு னுள்குவா ருள்கிற்றை
உள்ளத்தாற் காணானே வுற்று'

எனச் சிவஞானபோதம் பதினோராம் சூத்திரத்தில் வரும் வெண்பாவில் மெய்கண்டார் இதனைத் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

இறைவன் பெத்தம், முத்தி இரண்டிலும் ஒன்றாகியும் வேறாகியும் உடனாகியும் நிற்கின்றான். எனவே முத்தியில் ஒன்றாகி நிற்றலால் உயிரின் அறிவோடு வேறின்றிக் கலந்து, வேறாகி நிற்றலால் சிவபோகமாய் விளங்கித் தோன்றி, உடனாகி நிற்றலால் அச்சிவபோகத்தை உயிர்கள் அநுபவிக்கும்படி செய்கிறான். இதனால் உயிர்கள் முழு இன்பத்தையும் நுகர்கின்றன என்று மிக்க ஆழத்தோடு தன்கருத்தைச் சைவசித்தாந்தம் கூறியுள்ளது. விவரிக்க முடியாத முக்திநிலை பற்றியும் அஃது அளவை நூன்முறை பிறழாமலே கூறிய திறம் ஒரு தனிச்சிறப்பென்பதைக் கூறவேண்டுவதில்லை.

சைவசித்தாந்தத்திற்குரிய தனிச்சிறப்புக்கள் பலவாகும். அவற்றுள் சிலவே ஈண்டெடுத்துக் கூறப்பட்டிருப்பினும், அவை அதன் சிறப்புக்களை ஓரளவு உணர்த்துமெனக் கருதுகின்றோம்.

— நன்றி
தினகரன்

# கிரியைத் தொண்டு

(சிவஞானவாரிதி, சைவசித்தாந்த காவலர்
குமாரசுவாமி குருசுவாமி)

நாம் எமது பிறவிப் பெரும்பயனை அனுபவிப்பதற்கு இறைவனது திருவருள் என்றும் துணை செய்யக் காத்திருக்கிறது. எமது அறியாமையினாலே நாம் திருவருள் வழிப்படாது மாற்று வழியிற் சென்று குளிக்கப் போய் அச்செயலை மறந்து வேறு செயலில் ஈடுபட்டவர்கள் போல வாழ்நாள் வீழ் நாளாகக் கழித்து விடுகிறோம். எம்மைச் சீர்திருத்துவதற்கு இறைவழிபாட்டிலே மனதைத் திருப்புவது சாலச்சிறந்ததே.

கிரியைநெறி நின்று இறைவழிபாடு செய்வது செயல் முறைவழி மன ஒடுக்கத்திற்கு வழிவகுக்கிறது என்று கருதப்படுகிறது. பூசை அறையிலோ கோயிலிலோ இறைவன் திருமுன்பதாக வாசனை பொருந்திய தூபம் இடுதல், அழகு பொருந்திய தீபங்களை ஏற்றுதல், ஆன்மாக்களுக்கு அருள் பொழிவதற்கென உருவத் திருமேனி கொண்டு எழுந்தருளியிருக்கும் இறைவனுக்கு அபிடேகம் செய்தல், அன்றலர்ந்த நறுமணம் கமழும் மலர்களாலே மனத்தூய்மை உடையவராய் இறைவனது பலவிதமான பெயர்களையும் கூறி அருச்சித்தல், பஞ்சப் புலன்களையும் அடக்கி, அக்கினி வளர்த்து அதிலே நெய், நெற்பொரி, ஆலிலை, பலாசிலை, அறுகு, சமித்துவகை முதலியவற்றை இட்டு ஓமம் வளர்த்து, பிரார்த்தனை செய்தல் ஆகிய வழிகளிலே ஈடுபடுவதைக் கிரியைநெறி என்பார். இந்தவகையிலே கிரியைநெறி நிற்பவர்கள் சாலோகபதம் பெறுவர் என்று இறைவனே திருவாதவூரடிகளுக்கு அருளிச் செய்துள்ளார்.

(திருவாதவூரடிகள் புராணம் பாடல் 118)

கிரியைத்தொண்டுகளுள்ளே இறைவனுக்கு அபிடேகம் செய்தல், மலர் கொண்டு அருச்சித்தல், ஓமம் வளர்த்து அக்கினியிலே அவிசொரிந்து வேள்விசெய்தல் ஆகியன சிவாச்சாரியர்களாலே செய்யப்பெறுவன.

கோயில்களிலே நறுமணம் கமழும் தூபம் இடுதல், அழகான விளக்குகள் ஏற்றுதல் ஆகிய தொண்டுகளை யாருமே செய்யலாம். அதற்கெனக் கட்டுப்பாடு எதுவும் கிடையாது. தூபமிட்டுத் தொண்டாற்றியவர்களுள்ளே யாவரும் அறிந்தவராக விளங்குபவர் குங்கிலியக்கலய நாயனுர். மார்க்கண்டேயருக்காக யமனை உதைத்துக் கருணை பாலித்த திருக்கடவூர் என்னும் பதியிலே பிறந்தவர் கலயர். திருக்கடவூரில் எழுந்தருளியிருக்கின்ற அமிர்தகடேசர் திருச்சந்நிதியிலே என்றும் குங்கிலியத்தூபம் இடும் தொண்டினைச் செய்து வந்ததனாலே குங்கிலியக்கலயர் என்னும் சிறப்புப்பெயர் இவருக்கு வழங்கி வரலாயிற்று.

இறைவனுடைய சந்நிதானத்தில் எம்மாலான தொண்டினை நாம் செய்ய முன்வருவதன் நோக்கம் எம்மைத்தூய்மைப்படுத்திக் கொள்ளும் பொருட்டேயாகும். நாள்தோறும் கோயிலுக்குச் செல்வதே சிறப்புடையது. அவ்விதம் கோயிலுக்குச் சென்று தம்மாலான தொண்டு செய்வது மனத்தூய்மையை வளர்ப்பதற்குப் பெரிதும் உதவுகிறது. தூய்மையான உள்ளத்திலே இறைவன் என்றும் நீங்காது நிறைந்து நின்று கருணை பொழிவான். இறைவனே தொண்டர்தம் உள்ளத்துள் ஒடுக்கம் என்றார் ஒளவைப் பிராட்டியார்.

இறைவனை உள்ளத்திலே இருத்துவதற்குத் தொண்டனாதல் வேண்டும். தொண்டனாவதற்குத் தொண்டு செய்தல் வேண்டும். தொண்டு செய்வதற்கும் உளப்பக்குவம் வேண்டும். பண்பட்ட உள்ளம் இறைவன் உறையும் இருப்பிடமாகும்.

> காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக
> வாய்மையே தூய்மையாக மனமணி லிங்கமாக
> நேயமே நெய்யும்பாலா நிறைநீர் அமையஆட்டிப்
> பூசனை ஈசனுர்க்குப் போற்றவிக் காட்டினோமே.

என்னும் தேவாரம் இதன் சிறப்பினை அழகுற எடுத்துக் காட்டுகின்றது. ★

# பவானி உறை வேதநாயகி

1804-ம் ஆண்டு நவம்பர் மாதம் இரவு நேரம். கிழக்கு இந்தியக் கொம்பனியின் பிரதிநிதி திரு. வில்லியம் காரோ டாக் பங்களா மேல்மாடியில் உள்ள தமது அறையில் இருந்த வண்ணம் ஓர் இரகசிய அறிக்கையைத் தயாரித்துக் கொண்டிருந்தார். டாக் பங்களா அந்தக் கிராமியச் சூழலில் கம்பீரமாகத் திகழ்ந்தது. அதன் வலப்புறத்தில் வேதநாயகி சமேத சங்காமேஸ்வரர் ஆலயம் இருந்தது.

பருவகால மழை ஓய்ந்து இருந்தகாலம் எனினும் அன்றைய தினம் முழுவதும் பயமுறுத்திக் கொண்டிருந்த புயல் மிகுந்த உத்வேகமாக எழுந்தது. மின்னல் இடி முழக்கத்துடன் பெருமழை பெய்தது. காவேரியும் பவானியும் கலக்குமிடமாம் பவானிகூடலில் நீர்மட்டம் உயர்ந்து கொண்டிருந்தது.

நடுநிசிக்கு மேலாகி விட்டது. அறிக்கையும் முடியுந் தறுவாயில் இருந்தது. அந்நேரத்தில் தனது சட்டையை யாரோ இழுப்பது போன்ற உணர்வு பெற்றார் காரோ. திரும்பிப் பார்த்த பொழுது பத்து அல்லது பன்னிரண்டு வயது மதிக்கத்தக்க ஓர் இளம்பெண் அன்றைய நாகரீக நிலைக்கேற்ப குதிவரையுள்ள பாவாடையும், சட்டையும் காது, கழுத்து, கைகளிற் ஜொலிக்கும் நகைகள் அணிந்து நிற்பதைக் கண்டார். அப்பெண்மணி அவரைத் துரிதமாக படிகள் வழியே கீழே இறக்கி பங்களாவிலிருந்து வெளியே இட்டுச் சென்றாள். வழமை போல் ஏதோ கலவரங்கள் ஆரம்பமாகி மக்கள் ஒருவரையொருவர் அடித்தும் கொலை செய்தும் இருக்கிறார்கள் போலும், நிலைமையை எவ்வாறு சமாளிப்பது என யோசித்த வண்ணம் காரோ நடந்து கொண்டிருந்தார். அப்பொழுது மின்னல் ஒன்று திகிலூட்டும் வேகத்துடன் அப்பங்களா மீது விழுந்தது. அவர் அலுவல் பார்த்துக் கொண்டிருந்த மேல்மாடி அறை, மேல் கூரை உடைந்ததுடன் கற்குவியலாக மாறியது.

இந்த அதிர்ச்சியிலிருந்து மீண்டும் சுய உணர்வு பெற்ற காரோ, தன்னைக் காப்பாற்றிய சிறு பெண்ணைப் பற்றித் திடீரென நினைக்கலானார். அவள் யார்? தன்னைக் காப்பாற்றியது எவ்வளவு சாமர்த்தியமாக நடைபெறச் செய்தாள்? என்ற சிந்தனையில் அவளைத் தேடினார். காவேரிக்கரையில் அவள் செல்வதைக் கண்டு "நில் நில்" எனக் கூவியபடியே ஓடினார். மங்கலான வைகறைப் பொழுதில் மயக்குந் தன்மையான புன்னகை புரிந்தவாறே அப்பெண் கோவிற் சுவர்ப்பக்கம் சென்று மறைந்தாள். அங்கு ஒரு கதவு இருக்கக் கூடும் என்ற நினைப்பில் காரோ அவ்விடத்திற்கு விரைந்தார். ஆனால் கதவு இருப்பதற்கான அறிகுறி கூட இருக்கவில்லை. ஒருவேளை இரகசியமான கதவு இருக்கக் கூடும் என்று கருதிய அவர் 'கதவைத் திறவுங்கள்' என்று கதறிய வண்ணம் கோவிற் கதவைத் தட்டினார். ஆனால் அது திறபடவில்லை. கோவில் அர்ச்சகரும் வேலையாட்களும் அருகில் இருந்த சிறு வீடுகளிலிருந்து "இந்த வெள்ளைக்காரர் ஏன் கோவிற் கதவுகளை உடைக்கிறார்" என அறிய வந்தனர்.

பக்தியிற் சிறந்த வயது முதிர்ந்த பிரதம அர்ச்சகர் காரோவுடன் பேசிப் பார்த்து அவரது துயருக்குரிய காரணத்தை அறிந்தார். காரோவின் எண்ணம் அந்தச் சிறுமி அங்கு வாழும் ஒருத்தியாக இருக்கலாம் என்பதாகும். அவரது வேண்டுகோளின்படி அங்கு வாழும் எல்லாச் சிறுமிகளும் எழுப்பி அழைத்துக்கொண்டு வரப்பட்டனர். இவள் இல்லை, இவள் இல்லை, என ஒவ்வொரு சிறுமியையும் கூறிய அவர், ஆகா அவள் எவ்வளவு அழகாக இருந்தாள் தெரியுமா? என வியந்து கூறினார்.

கோவில் அர்ச்சகர் இரகசியக் கதவுகள் இல்லை என உறுதிப்படுத்தினர். 'உம்மைக் காப்பாற்றியவள் மறைந்த இடத்தைக் காட்டும்' என்றார். 'கோவிற் சுவர்ப்பக்கம் போவதைக் கண்டேன்'. குறிப்பிட்ட இடத்திற்குச் சென்றதும், சில உதவியாளர் உதவியுடன் சுவரிலிருந்து சில கற்கள் எடுக்கப்பட்டு ஒரு துவாரம் ஏற்படுத்தப்பட்டது. காரோ

திகைப்பில் ஆழ்ந்திருக்கும் நேரத்தில் மூலத்தானத்தில் உள்ள திருவுருவங்களுக்குக் கற்பூர ஆராத்தி காட்டினர் அர்ச்சகர். தூவாரத்தினூடாக காரோ கண்ட வேதநாயகி அம்மனின் நகைகள் நட்சத்திரங்கள் போல மின்னின. அர்ச்சகருக்கு அம்மன்சிலை கடவுள்; ஆனால் காரோவிற்கு அதுவே தன்னைக் காப்பாற்றிய பெண்ணின் முகமும் உருவமும் ஆகும்; "நான் அவளையே பார்த்தேன் அவளேதான்" என மகிழ்ச்சியில் ஆரவாரித்தார். அர்ச்சகர் அம்மனின் திருவிளையாடலில் மயங்கி நின்றார்.

காரோ அமைதியாகவும் மிகுந்த உணர்ச்சிப் பெருக்குடனும் இருந்தார். தன்னைக்காப்பாற்றியது தான் சேவிக்காத ஓர் அம்மன். இந்துக்களைப்பற்றிய தவறான அபிப்பிராயங்கள் யாவும் அவர் மனதிலிருந்து மறைந்தொழிந்தன. நன்றிப் பெருக்கால் அவர் நேரம் போவது தெரியாமல் நின்றிருந்தார்.

இரு மாதங்களுக்குப் பின்னர் ஒரு தந்தத்தொட்டிலை அவ்வாலயத்திற்கு உபயமாக்கினர் அவர். "நன்றிப் பெருக்குடன் வில்லியம் காரோ 11-1805"

அந்தச் சூழலில் தாம் வேலை செய்த காலங்களில் முடிந்த போதெல்லாம் வேதநாயகி அம்மனைத் தரிசனம் செய்ய காரோ தவறியதில்லை.

ஈரோட்டிலிருந்து 12 கிலோ மீட்டர் தூரத்தில் பவானி கூடல் உள்ளது. ஈரோட்டில் அல்லது காரோ வாழ்ந்த டாக் பங்களாவிலேயே தங்கி அன்பர்கள் சுலபமாக வேதநாயகி அம்மையைத் தரிசிக்கலாம்.

[நன்றி: தபோவன் பிரசாத் (ஆங்கிலம்) T சாவித்திரி அவர்களின் வர்ணனையைத் தழுவி எழுதப்பெற்றது.]



— - —

உ

சிவமயம்

குருபாதம்

# நல்லை ஆதீன முதல்வர்



நல்லூர் ஸ்ரீ ஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாத ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் சென்ற 12-4-81 அன்று மகா சமாதியடைந்தமை சைவஉலகிற்கு ஓர் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

தமது இளம் வயது தொடக்கம் சமயப் பணிக்கே தம்மை அர்ப்பணித்த அன்னாரின் தொடர்பும், ஆசியும் "திருவருளுக்கு" உண்டு.

பல்லாயிரக் கணக்கானோர் பரவசத்துடன் கேட்டுப் பயன்பெற்ற கருத்தாழம் மிக்க தமது சமயப் பிரசங்கங்களை அவர் கொழும்பு பண்டாரநாயக்கா மாவத்தை ஸ்ரீ சிவ சுப்பிரமணிய சுவாமி கோவிலில் தொடங்கினார் என்பர்.

பலகாலமாக வெவ்வேறு இடங்களில் பிரசங்கம் மற்றும் சமய நிகழ்ச்சிகளில் பங்குபெற்றஅவர், நீண்டகாலத்திற்குப் பிறகு அக்கோவிலில் நடைபெற்ற திருவருள் வெளியீட்டு விழாவில் பங்குபற்றியதையிட்டு அவர் பெருமகிழ்ச்சியடைந்தார்.

அந்நிகழ்ச்சியே கொழும்பில் அவர் கலந்து கொண்ட கடைசி நிகழ்ச்சியுமாகும்.

தொடக்கமும் முடிவும் ஒரே சந்நிதானத்தில் நடைபெறச் செய்தமை இறைவன் திருவருளேயன்றி வேறில்லை.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அன்னார் ஆற்ற வந்த சமயப்பணியினைத் தொடர்ந்து எம்மாலியன்ற வண்ணம் நிறைவேற்ற உறுதி பேணுவோமாக!

தேவாரம்

ஓதி யாருமறி வாரில்லை யோதியுலகெலாம்
சோதியாய் நிறைந் தான்சுடர்ச் சோதியுட் சோதியான்
வேதி யாகிவிண் ணாகிமண் ணோடெரி காற்றுமாய்
ஆதி யாகி நின்றானும் ஐயாறுடை ஐயனே.

—திருஞானசம்பந்த சுவாமிகள்

# அன்னை காமேசுவரி அருள் விளக்கம்

— அமரர் பிரம்மஸ்ரீ க. வை. ஆத்மநாத சர்மா —

கட்டுரை உதவியவர் : பிரம்மஸ்ரீ ஆ. வை. சர்மா

அகில உலகமும் தோன்றி விரிந்து ஒடுங்குவதற்கு ஆதாரமாயிருப்பவர் அன்னை காமேசுவரி. அதற்கு மூலமாய் இருப்பவர் அப்பன் காமேசுவரன். அவ்விருவரும் பிரிவுபட முடியாத ஒன்றுபட்ட நிலையே பரப்பிரம்ம சுவரூபம். அது காலவரம்புக்கு உட்படாதது; ஆயின் அகில உலகிற்கும் காலத்தைக் கணிப்பது. அது தனக்கென ஒருசெயலும் வேண்டாதது. எல்லாச் செயல்களையும் செய்வித்து நிற்பது. அது தனக்கென உருவமே இல்லாதது. எல்லா உருவமும் தானேயாய் உள்ளது. அது தனக்கெனத் தனியான ஒரு நிறமோ, இயல்போ இல்லாதது. ஆனால் அகில நிறங்களும் எல்லா இயல்புகளும் தானேயாய் உள்ளது.

தூய நீரின் இயல்பு யாது? நிறமற்றது, சுவையற்றது, வடிவற்றது. தூய பளிங்கு நிறமே இல்லாதது. பளிங்கின் தூய்மையைப் பரிசோதிப்பதற்கு, அதனைத் தூய நீரில் இட்டுப் பார்ப்பர். பளிங்குக்கு வடிவம் இருப்பது போலத் தெரிந்தாலும், அதனைத் தூயநீரினுள் இட்டுப் பார்க்குமிடத்து அதன் வடிவம் தெரிவதில்லை. அதுவே ரூபாரூப — அருவுருவ நிலை. அதுவே பரப்பிரம்ம ஸ்வரூபம்.

சூரியப்பிரகாசம் ஒரே வெண்மை ஒளிமயமானது. அதற்கெனத் தனியாக ஒரு நிறமில்லை. ஆனால் உலகிலுள்ள எல்லா நிறங்களும் சூரிய ஒளியில் இருந்தே தோன்றுகின்றன. அவ்வாறு நிறம்பெற்ற பொருள்கள் யாவும் அழியும்போது தம் தனிநிறங்கள் அழிந்து வெள்ளொளியிலேயே அடங்கிவிடுகின்றன. இது விஞ்ஞானிகள் பரிசோதித்துக் காட்டும் உண்மை.

காமேசுவரனது ஸ்வரூபம் சுத்தமான படிகம்போன்றது. அந்தப் பரப்பிரம்ம ஸ்வரூபம் அருள் மயமாக மாறும்போது செவ்வண்ணத் திருமேனியாகிறது. நாள்தோ

றும் ஆன்மாக்களுக்கு அருளும் திருவருட் குறிப்போடு உதிக்கும் சூரியனது அருண வண்ணமே (செந்நிறம்) காமேசுவரியின் திருவருட்பொலிவு. அன்னை காமேசுவரியை செவ்வண்ணமாகக் கொள்வதற்கு ஆதாரம் எது எனின், மூகபஞ்சாசதி — ஆர்யா சதகத்தில் அன்னையின் திருமேனியை வர்ணிக்குமிடத்து "சித்வபுஷா காஞ்சிபுரே பந்து ஜீவ காந்தி முஷா" அதாவது செம்பருத்திப் பூவின் வண்ணமுடையாள் என்றும், "காஸ்மீர ஸ்தபக கோமலாங்கலதா" அதாவது காஷ்மீர தேசத்தில் விளையும் குங்குமப்பூவின் வண்ணமுடையாள் என்றும், சௌந்தர்ய லஹரியில் தேவியை வர்ணிக்குமிடத்து "ஜகத்ராதும் சப்போர்ஜயதி கருணு காசிதருணு" அதாவது — காமேசுவரரது கருணையானது சூரியோதயத்துச் செவ்வண்ணமான காமேசுவரியாகி அகில உலகத்தையும் காப்பாற்ற வல்லதாகிறது என்பதுமாம்.

இதே கருத்தை அபிராமிப்பட்டர் தான் இயற்றிய அபிராமி அந்தாதி முதற் பாடலிலேயே,

"உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்க மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி யபிராமி என்றன் விழுத்துணையே"

எனக் காட்டியுள்ளார்.

அன்னை அபிராமியின் திருமேனிச் செம்மையை உதிக்கின்ற செங்கதிர், மஞ்சாடிமலர், மாணிக்கமணி, மாதுளம்பூ, மின்னற்கொடி, குங்குமக்குழம்பு இவற்றிற்கு உவமையாக ஒப்பிட்டுப் பலவாறு பாராட்டுகிறுர்.

திருமூலர் திருமந்திரத்திலும் —

"கொம்பனை யாளைக் குவிமுலை மங்கையை
வம்பவிழ் கோதையை வானவர் நாடியைச்
செம்பவளத் திருமேனிச் சிறுமியை
நம்பியென் னுள்ளே நயந்து வைத்தேனே".

என அம்மையின் திருமேனியை செம்பவளத்துக்கு ஒப்பிட்டுப் பாடுகிறுர்.

8

அன்னை லலிதாம்பிகை தியானத்திலும், "ஸிந்தூ ராருண விக்ரஹாம்" — குங்குமச் செம்மை வாய்ந்த திரு மேனியாள் எனவருகிறது.

இப்படியாகச் செவ்வண்ணத் திருமேனியென்று அன்னையைப் போற்றிவர — அன்னை பார்வதியை சியாமளாதேவி — பச்சை வண்ணம் உடையாள் என்றும் கூறப் பட்டுள்ளது ஏன்? மூகபஞ்சாசதியை இயற்றிய மூககவி தமது முதலாவது ஆர்யாசதகத்தில் அன்னையைச்செவ்வண்ணத்திரு மேனியாள் எனப்பலவாறு வர்ணித்தவர், மூன்ருவதான ஸ்துதி சதகத்தில், "தாபிஞ்ச ஸ்தபகத் விஷே" — காயாம்பூப் போன்ற நீலத் திருமேனியாள் என்றும், "பரிபுல்ல நீல நளின ஸ்யாமாட்சி" அலர்ந்த நீலோத்பல மலரின் அழகார்ந்த வண்ணக் கருங்கண்ணியாள் என்றும் கூறுகிருர். அதனுல் அன்னை காமேசுவரி வேறு, அன்னை பார்வதி வேறு என்று கொள்வதா?

இந்த ஐயம் தீரவேண்டுமானுல் இக்கட்டுரைத் தொடக்கத்தில் குறிப்பிட்ட பரப்பிரம்ம ஸ்வரூபத்தையே மீண்டும் சிந்திக்க வேண்டும்.

பரப்பிரம்மத்தின் கருணையே காமேசுவரி என்று கூறப் பட்டது. அந்தக் கருணையினுலேயே — காமேசுவர காமேசுவரியின் திருவருட் கூட்டுறவுப் பெருக்கினுல் படைத்தல், காத்தல், அழித்தல் — தோற்றம், விரிவு, ஒடுக்கம் என்பன நிகழுவதாயின. அந்த முத்தொழில்களும் நிகழுவதற்கு ஆணும் பெண்ணுமாக மூன்று சோடிகள் தோற்றுவிக்கப் பட்டனர். அப்படி ஏன் தோற்றுவிக்கப்பட வேண்டும்? பரப்பிரம்மமே முத்தொழிலையும் செய்யலாகாதா? பரப்பிரம்மம் தனக்கென ஒரு கருமமும் வேண்டாதது. ஆகவே இத்தொழில்களைச் செய்வதற்காகவே இச்சோடிகள் தோற்றுவிக்கப்பட்டன.

பரப்பிரம்மத்தின் அனுக்கிரஹ அமைப்பினுல் அரன் — சரசுவதி, அரி — உமை, பிரமன் — இலக்குமி ஆகிய மூன்று ஆண் பெண் சகோதர சோடிகள் தனித்தனியாக உருப்பெற்றனர். முதலில் இம்மூன்று சோடிகளிடத்தும் நிற ஒற்றுமை

யைக் காணலாம். அரனும் சரஸ்வதியும் தூய வெண்மை நிறம் உடையவர். அரியும் உமையும் நீலமேக ஸ்யாமள (கருமை) வண்ணத்தினர். பிரமனும் – இலக்குமியும் உருக்கி ஒளிரும் பொன்மயமான மஞ்சள் வண்ணம் உடையோர். இந்த மும்மூர்த்திகளும் மூன்று சக்திகளும் ஒன்றுவிட்ட மாற்ருகச் சதிபதிகளாயினர் அதனுல் தோற்றம், விரிவு, ஒடுக்கம் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்கள் நடைபெறுகின்றன.

நாதப்பிரம்மமான ஒலிமயமே தோற்றத்திற்கெல்லாம் மூலம். அதனுல் பிரம்மா வாக்கின் இறைவி சரஸ்வதியை தமது சதியாக்கித் தமது நாவையே இருப்பிடமாகக் கொடுத்துப் படைப்புத் தொழிலை மேற்கொண்டார். அகில வல்லபத்திற்கும் இருப்பிடமான விஷ்ணுமூர்த்தி எல்லாச் செல்வத்திற்கும் இறைவியான இலக்குமியைச் சதியாக்கித் தமது இதயத்தையே இருப்பிடமாகக் கொடுத்துக் காத்து இரட்சிக்கத் தொடங்கினர். பேரின்பம் அருளும் சிவபிரான் ஆன்மாக்களுக்கெல்லாம் ஆறுதல் அளிக்கும் அன்னை உமாதேவியைச் சதியாக்கித் தமது இடப்பாகம் முழுவதையுமே அவருக்கு இடம் கொடுத்து ஒடுக்கியருளும் பணியை மேற்கொண்டார். உமையம்மையின் தனித்துவத் தோற்றத்தைத் துர்க்காதேவியின் மூர்த்தி வடிவை அவதானித்து அறியலாம். சங்கு, சக்கரம் தாங்கிய கோலத்தில் நாராயணியாகப் பச்சைத் திருமேனியுடன் அவர் விளங்குகிருர்.

மும்மூர்த்திகள், மூன்று சக்திகள், முக்குணங்கள் மூன்று அவத்தை (நிலை) கள், இப்படி யாவும் மூன்ருக இருக்கின்றன. சாத்துவிகம், இராஜசம், தாமசம் எனக் குணங்கள் மூன்று. கனவு, விழிப்பு, தூக்கம் என அவத்தைகள் மூன்று. சத்வகுணம் வெண்மை நிறம், இராஜசம் மஞ்சள் வண்ணம், தாமசம் கருமை நிறம், மூன்று நிறங்கொண்ட சக்திகள் முறையே மூன்று அவத்தைகளையும் ஆன்மாக்களுக்கு அருளுவர். ஸ்வப்னம் – கனவுநிலையில் மக்களாகிய நாம் எவ்வளவோ காட்சிகளைப் படைத்து அனுபவிக்கிறேம். அவற்றுள் இன்பமானவை சில, துன்பமானவை பல. ஜாக்ரம் — விழிப்பு நிலையில் நாம் நம்மைப் பாதுகாக்கும் முயற்சி

களோ பல. அவையாவும் இன்பந்தருவன போலத் தோன்றினாலும் இறுதியில் துன்பமாகவே முடிகின்றன. சுஷப்தி — தூக்க நிலையில், உண்மையான நித்திரையில் எமது கருவி கரணங்கள் யாவும் ஓய்வு பெறுகின்றன. இந்த நிலையே எமது உள்ளத்துக்கும் உடலுக்கும் ஆறுதல் தருவது. இந்த ஆறுதலை அருளுபவர் சிவமும் சிவசக்தியும் என்பதை நாம் உணர வேண்டும்.

ஓரிரவிலே கனா முதலான எதுவித கலவரமும் இல்லாமல் அமைதியாகத் துயில்வதை ஆனந்தமான தூக்கம் என ஒப்புக்கொள்ளும் நாம், கனா, விழிப்பு, தூக்கம் என்ற இந்த மூன்று நிலைகளையும் கடந்து அப்பாலுள்ள நான்காவது துரீய நிலையை பரிபூரண இன்பநிலை என ஏன் ஏற்கலாகாது? எல்லையற்ற இன்ப நிலையன்றோ துரீயநிலை! ஜீவன்முக்தர்கள் அனுபவிக்கும் பேரின்ப நிலையே துரீயநிலை. இதனை எமக்கு அருளுபவர் காமேசுவரனது திருவருள் விலாசமாகிய காமேசுவரியேயாவர். அன்னை காமேசுவரியின் அருள் விளக்கத்தை சவுந்தரிய லஹரி நன்கு தெளிவுபடுத்துகிறது. அதில் ஒரு பாடலில்,

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களையும் தத்தமது சக்திகளான சரஸ்வதி, இலக்குமி, உமை, மஹேஸ்வரி, மனோன்மணி ஆகியோருடன் இணைந்து நடாத்தும் பஞ்சமூர்த்திகளான பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், மஹேஸ்வரன், சதாசிவன் ஆகியோர் முறையே தத்தமது சக்திகளுள் ஒன்றிலொன்றாக ஒடுங்கி ஈற்றில் காமேசுவர காமேசுவரி ஸ்வரூபமான பரப்பிரம்மத்தில் லயிக்கின்றனர் என்றும், காமேசுவரியின் புருவநெறிப்பையே கட்டளையாக ஏற்று மீண்டும் ஐந்தொழில் புரிகின்றனர் என விளக்கப்பட்டுள்ளது. இதே கருத்தை உள்ளடக்கியே லலிதா சகஸ்ர நாமத்தில் "பஞ்சப் பிரம்மாஸனஸ்தி தாயை நம:" அதாவது ஐந்தொழில் புரிந்து அமரும் தெய்வம் என வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

ஆகவே, இவற்றையெல்லாம் நன்கு சிந்தித்து அன்னை காமேசுவரியே பரப்பிரம்மத்தின் அருள் வடிவம் என்பதை உணர்ந்து போற்றி உய்தி பெறுவோமாக. ✱



உ
சிவமயம்
அம்பிகை துணை

# நாயகி பொற்றேரை இழுத்திடுவோம்

(நயினைத்தபால்)

— காவலூர்க்கவிஞன் —

## ஞா. ம. செல்வராஜன்

(நன்றி கு.வ. சபாநாதன் அவர்களது நயினை நாகேஸ்வரி பதிப்பு - 1962

கண்ணிகள்

வாருங்கள் வாருங்கள் பக்தர்களே - தாயை
வணங்கி வாழ்த்தித் துதித்திடுவோம்
சேருங்கள் சேருங்கள் பக்தர்களே — ஒன்று
சேர்ந்துபொற் றேரை யிழுத்திடுவோம்.

கூடியே ஒன்றாக நின்றிடுவோம் — கரம்
கூப்பி அம்பாளை மன்றாடிடுவோம்
பாடி மகிழ்ந்து கொண்டாடி அனைவரும்
பக்தியாய்த் தேரை யிழுத்திடுவோம்.

அம்பாளின் செம்பாதம் கிட்டிடுவோம் — மனத்
தன்பாகத் தேர்வடந் தொட்டிடுவோம்
நம்பாலுறும் பவவெம்பிணி தீர — நம்
நாயகி தேரை யிழுத்திடுவோம்.

வார்முரசங்கள் அடித்திடுவோம் — தாயை
வாழ்த்திச் சங்கீதம் படித்திடுவோம்
ஊர்முழு துங்கூடி எங்கள் நாகேஸ்வரி
ஊர்ந்திடுந் தேரை யிழுத்திடுவோம்.

ஆல வட்டங்க ளெடுத்திடுவோம் — எம
தன்பான நெஞ்சைக் கொடுத்திடுவோம்
கோலமுடனிளம் வால வயோதிபர்
கூடியே தேரை யிழுத்திடுவோம்.

வெண்சா மரைகொண்டு வீசிடுவோம் — எங்கள்
வேதனையைத் தாய்க்குப் பேசிடுவோம்
எண்சாணுடம்பு இருக்குமட்டுந் தாயார்
ஏறிடுந் தேரை யிழுத்திடுவோம்.

சந்தனங் குங்குமஞ் சாற்றிடுவோம் — நறுஞ்
சவ்வாது பன்னீரை ஊற்றிடுவோம்
பந்துசன ரொருமித்து வந்தேகூடிப்
பற்றியே தேரை யிழுத்திடுவோம்.

கற்பூரத் தீபங்கள் காட்டிடுவோம் — இரு
கையை நீட்டிஅருள் கேட்டிடுவோம்
அற்புதமாக அழகா யமைந்திட்ட
ஆணிப்பொற் றேரை யிழுத்திடுவோம்.

காணிக்கை நேர்த்தி கொடுத்திடுவோம் — செடில்
காவடி தோளி லெடுத்திடுவோம்
தோணித்துறை தங்கும் நாகம்மாள் தோன்றிடுந்
தூயபொற் றேரை யிழுத்திடுவோம்.



# நயினை நாகேஸ்வரி

— குல-சபாநாதன் —

அன்னை பராசக்தி வழிபாடு அகிலமெலாம் பரவியிருப்பதை யாவரும் நன்கறிவர். சக்தியும் சிவமும் ஒன்றே விளக்கும் ஒளியும்போல.

"அருளது சக்தியாகும் அரன் தனக்கு அருளையின்றித்
தெருள் சிவம் இல்லை, அந்தச் சிவமின்றிச் சத்தியில்லை"

எனச் சிவஞானசித்தியாரில் வரும் அடிகள் இவ்வுண்மையினை நன்கு எடுத்துக் காட்டுகின்றன.

அன்னை கோவில்கொண்டு எழுந்தருளியிருக்கும் தலங்களுள் வட இலங்கையிலுள்ள நயினாதீவு நாகேஸ்வரி ஆலயம் மிகமிகத் தொன்மை வாய்ந்தது.

நயினாதீவுக்கு நந்தாப் புகழையளிப்பது ஆண்டுள்ள நாகேஸ்வரி ஆலயமாகும். இது நாகம்மாள் கோயில், நாகபூஷணியம்பாள் கோயில் எனவும் வழங்கப்படும். இவ்வாலயத்தைப் பற்றியுள்ள ஐதீகங்கள் மிகப்பல.

**நாகம் அர்ச்சனை செய்தது**

முன்னொரு காலத்தில் நயினாதீவிலுள்ள அம்பிகையை ஒரு நாகம் பூசித்து வந்ததாம். ஒருநாள் அந்நாகம் அர்ச்சனை செய்தற்காகப் பூக்கள் கொய்வதற்காகச் செல்லும் வழியில் ஒரு கருடன் அதனைக் கொல்லும் பொருட்டு எதிர்த்து வந்தது. கருடனைக் கண்டஞ்சிய நாகம் கடற்கரைக்குச் சமீபத்திலிருந்த கல்லொன்றினைச் சுற்றிக்கொண்டிருந்தது. கருடனும் அந்த நாகத்தைக் கொல்லாமலும் அதனை விட்டகலாமலும் அதற்கெதிரேயிருந்த கல்லொன்றின்மீது இருந்தது. இங்ஙனம் இவையிரண்டும் பகைமை கொண்டிருக்கும் சமயத்தில் அக்கடல் வழியாக மரக்கலத்திற் சென்ற வைசியன் ஒருவன் அந்நாகத்தின் பயத்தைக் குறிப்பாலுணர்ந்து மரக்கலத்தை நிறுத்தி அக்கருடனை விலகும்படி கேட்டான்.

"உனது செல்வம் யாவற்றையும் கொணர்ந்து என் முன் வைத்தால் விலகுவேன்" என்றது கருடன். வணிகனும் அங்ஙனமே செய்தான். நாகமும் தனது நன்றியைச் செலுத்தி நயினதீவை அடைந்தது. வணிகனும் தனது நாட்டிற்குத் திரும்பினன். நடந்தவற்றையெல்லாம் தன் மனைவியிடம் கூறினன். அன்றிரவு வணிகனும் மனைவியும் நித்திரை கொள்ளும்பொழுது ஒரு பேரொளி தோன்றி அவர்களுடைய கண்களைச் சிறிது நேரம் கூசச் செய்தது. பின்பு அவர்கள் எழும்பிப் பார்த்தபொழுது நாகரத்தினக் கற்கள் அவ்வறையில் இருப்பதைக் கண்டார்கள். "நயினதீவிலுள்ள அம்பிகையின் திருவருள் இருந்தவாறென்னே" என அவர்கள் வியப்புற்று நயினதீவுக்கு யாத்திரை செய்யப் புறப்பட்டார்கள். அவர்கள் நயினதீவுக்குச் சென்று வடகிழக்குக் கடற்கரையில் நாகம்மாளுக்குச் சிறந்ததோர் ஆலயம் கட்டுவித்தார்கள். ஏழு வீதிகளும் கோபுரங்களும் அமைத்தார்கள். நயினப்பட்டர் எனும் பிராமண குருவைப் பூசகராக நியமித்தார்கள். இத்தீவுக்கருகில் இப்பொழுதும் பாம்பு சுற்றிய கல், கருடனிருந்தகல் என இரு கற்களைப் பொதுமக்கள் காட்டுகின்றார்கள். இக்கற்கள் அலைகளினல் மோதுண்டு இயற்கையாகப் பெற்ற வடிவங்களை ஆதாரமாகக்கொண்டு மேற்கூறிய கதைகள் உருவாகி யிருத்தலுங் கூடும்.

### கோயிலை இடித்தல்

புராதனப் பெருமை வாய்ந்த நாகேஸ்வரி ஆலயம் வர்த்தகரின் பொருள்கொண்டு விஸ்தரிக்கப்பட்டு விளங்குவதைக் கண்ட போர்த்துக்கீசர் இதனைச் சும்மா விட்டு வைப்பார்களா? இக்த ஆலயத்தில் உள்ள பொருள் பண்டத்தை அபகரிக்கும் பேராசை பிடித்த போர்த்துக்கீசர் இதனை அழிக்கத் தொடங்கினர். கோயில் தரைமட்டமாக்கப்பட்டது. இந்த வன்கண்ணரின் கொடிய செயலைக் கண்டு சைவமக்கள் அனலிடைப்பட்ட புழுப்போலத் துடிதுடித்தனர். தாங்கள் பக்தியுடன் வழிபட்டு வந்த மூர்த்திகளையும் பூசைப்பாத்திரங்களையும் தேர்களையும் அந்நியர் தீண்டக்கூடாதெனக் கருதி சைவநன்மக்கள் அவற்றை வெவவேறிடங்களில் ஒளித்து வைத்தார்கள். அம்பாளை மேற்குக் கடற்

கரையிலுள்ள ஓர் ஆலமரப் பொந்தில் வைத்து வழிபட்டு வந்தனர். இந்தமரம் 'அம்பாள் ஒளித்த ஆல்' என வழங்கப் பட்டதென ஓர் ஐதீகமுண்டு. அன்னியர் கோவிலை இடித்த போதிலும் அம்பாள் வழிபாட்டை நிறுத்த முடியவில்லை. அவர் நயினுதீவு மக்கள் ஒவ்வொருவருடைய உள்ளமாகிய பெருங்கோவிலில் உறுதியான இடம் பெற்று விளங்கினுள். அன்னிய மதத்தினர் இன்னல் செய்தவிடத்தும் நயினுதீவு மக்கள் சைவப்பற்றினைக் கைவிடவில்லை யென்பதனை இது உறுதிப் படுத்துகின்றது.

கோயிற் புனரமைப்பு:

டச்சுக்காரர் ஆட்சியின் பின்னர் நயினுதீவில் மீண்டும் நாகேஸ்வரி ஆலயம் சிறிய அளவிற் கட்டப்பெற்றது. எனினும் அங்கே ஸ்தாபிக்கப்பெற்றிருந்த சிவலிங்கத்தைச் சைவர்கள் தாம் மறைத்து வைத்திருந்த இடத்திற் காணுமையாற் பெரிதும் கவலை கொண்டார்கள். ஆயினும் நயினுதீவுக்கு வடபால் உள்ள புலியேந்தி அல்லது புளியந்தீவு எனும் சிறு தீவில் பழைய சிவலிங்கம் பிரதிஷ்டைசெய்யப் பட்டிருப்பதாகக் கேள்வியுற்ற சைவர்கள் ஒருவாறு மனந்தேறினுர்கள். அழகிய கோபுரம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

அண்மைக் காலம்வரை நாகபாம்புகள் இக்கோயிலுக்கருகில் வந்து செல்வது வழக்கமெனச் சில முதியோர் கூறக் கேட்டிருக்கிறேன்.

இப்போதைய கோவில்:

யாழ்ப்பாணக் கச்சேரியில் சைவசமயக் கோவில்களைப் பதிவுசெய்து வைத்திருக்கும் பழைய இடாப்பு ஒன்று உண்டு. இது 1882 ஆம் ஆண்டளவில் தயாரிக்கப்பட்டது.

இதன்படி, நாகபூஷணி அம்மன் கோவில் 1788-ல் இராமலிங்கர் இராமச்சந்திரர் என்பவரால் கட்டப்பெற்றது. மனேச்சர் இராமலிங்கர் கார்த்திகேசரும் பிறரும். கற்கட்டிடம். ஆண்டுக்கொருமுறை ஆனி 10-ஆந் தேதி தொடக்கம் 20-ஆந் தேதிவரை 10 நாட்கள் திருவிழா. திருவிழாக் காலங்களில் 10,000 பேர்வரை வருகின்றனர்.

மேலே குறிப்பிடப்பட்ட இராமச்சந்திரனின் ஆண்சந்ததியினரே இக்கோயில் மனேச்சராக இருந்து வருகின்றனர் எனச் சொல்லப்படுகின்றது.

காலத்துக்குக் காலம் இக்கோயிலில் அநேக திருப்பணிகள் நடைபெற்று வந்துள்ளன.

கோபுரத் திருப்பணியில் வட்டுக்கோட்டையைச் சார்ந்த இரகுப்பிள்ளை மணியம் அவர்களும், வேலணைச் சோமசுந்தர மணியம் அவர்களும் ஈடுபாடு காட்டினர். (1935-ம் ஆண்டு) விமானப் புனரமைப்பு வேலைகள் காரைக்குடி, திரு. M. செல்லக்கண்ணு ஸ்தபதியார் அவர்களால் அமைக்கப்பெற்று (1950—51-ம்ஆண்டு) மகாகும்பாபிஷேகமும் நடைபெற்றது.

புதிய சித்திரத்தேர் 1957-ல் அமைக்கப் பெற்றது. திரு. M. ஸ்ரீகாந்தா அவர்களைத் தலைவராகவும், திரு. செ. சிவஞானம், திரு. ஆ. கந்தையா ஆகியோர் தனாதிகாரிகளாகவும், திரு. வே. சுந்தரம்பிள்ளை, வே. செல்வநாயகம், திரு. கா. ஆறுமுகம் ஆகியோர் செயலாளர்களாகவும் கடமையாற்றிய ஸ்ரீ நாகபூசணி அம்பாள் தேர்த் திருப்பணிச் சபை இப்புனிதப் பணியை ஆரம்பஞ் செய்தது, திருப்பெருந்திரு, குன்றக்குடி அடிகளாரின் ஆலோசனையின் பேரில் நாகர்கோவில் திரு. S. குமாரசுவாமி ஆசாரியார் அவர்கள் இப்பணியைக் கையேற்று தேர்ச்சிபெற்ற நுண்தொழில் வல்லுநர் சிலரின் உதவியுடனும் அம்பாள் அருளாலும் இனிது நிறைவேற்றினர்.

**பாமாலை சூட்டிய பாவலர்:**

நயினை நாகேஸ்வரி அம்மன் மீது வண்ணைநகர் திரு. அமரசிங்கப் புலவர் அவர்கள் பாடிய நயினை ஊஞ்சல் 1880-ம் ஆண்டு அச்சிடப்பெற்றுள்ளது. மிகவும் பிற்காலத்திலிருந்தவரும் அராலியிற் பிறந்து அனலைதீவு, நயினாதீவு, கரம்பன் முதலிய இடங்களில் வசித்தவருமாகிய வரகவி முத்துக்குமாரப் புலவர் (நயினாதீவுச் சாமியார்) நாகேஸ்வரி மீது ஒரு பதிகம் பாடியுள்ளார். 20-ம் நூற்றுண்டில் வரகவிப் புலவராக விளங்கிய நயினை நாகமணிப்புலவர், நயினை நீரோட்டய

மகவந்தாதி என்ற சிறந்த பிரபந்தத்தை 1930-ம் ஆண்டு வெளியிட்டார். இவர் இயற்றிய நயினை மான்மியம் இன்னும் அச்சுவாகனமேறுது உள்ளது. வேலணை திரு. ம. தம்பு உபாத்தியாயர் நயினை நாகேஸ்வரி பதிகமும் திருவிரட்டைமணிமாலையும் என்னும் பாடலை 1921-ம் ஆண்டில் பாடியுள்ளார். நயினைதீவுச்சுவாமிகளும் கவியோகி சுத்தானந்த பாரதியார் போன்ற மகான்களும் அம்பாளுக்கு அருட்பாமாலை பாடியுள்ளனர்.

---

## ஸ்ரீ நாகவீஸ்வரியம்மை பதிகம்

கந்தாள தொசியச் சினக்குங் கடாதடக்
        கைம்மலைமு கத்தவுணனைக்
    கால்கொண் டுதைத்துவன் றேலுரித் துப்போர்த்த
        காதலனை மன்ருடியே
முந்தாத ரத்தினெடு மிருநாழி நெற்பெற்று
        முடிவிலா வுயிர்களுய்ய
    முப்பத் திரண்டறந் தன்னையுத வியவன்னை
        மூதுலகி னீயாகையால்
சிந்தாகு லங்கொண் டியான்றிரிதன் முறையோ
        தினந்தினஞ் சொலவேண்டுமோ
    திருவுள மிரங்கியே சற்றுன் கடைக்கண்
        டிருப்பினுல் வெகுபாரமோ
நந்தாத வரமுதவு நங்கையே நயினை
        நகர்க்கண் மருவுங்கவுரியே
    நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசுக
        நாகவீஸ் வரியம்மையே.

— வரகவி சி. முத்துக்குமாருப்புலவர்



உ
அம்பிகை துணை

# தேவி பஞ்சகம்

— கு. இராமச்சந்திரன் —

விண்ணிருந்து குண்டெறியும் வெறியர் கூட்டம்
வேரோடிப் புவியைவிட்டு மறைய வேண்டும்
அண்ணலார் காந்திசொன்ன அஹிம்சா தர்மம்
அவனியை ஆள்பவருளத்தை ஆள வேண்டும்
மண்ணுலகில் சகோதரத்வம் மலிய வேண்டும்
மக்களெல்லாம் வறுமையின்றி வாழ வேண்டும்
நண்ணுவார் தமைக்காக்க நயினை மேவும்
நாகபூஷணி அருள்நீ பாலிப் பாயே!

சுத்தான்ம சித்திபெற்ற துறவோர் மூலம்
சுத்தசம ரசமார்க்கம் துலங்க வேண்டும்
தத்துவஞா னியர்கூட்டந் தழைக்க வேண்டும்
தரணிமுற்றும் அடிமையின்றி வாழ வேண்டும்
சத்தியமும் அன்பும்எங்கும் பரவ வேண்டும்
சகஉயிரும் ஒன்றென்ற தகைமை வேண்டும்
பத்தருடன் முத்தர்களும் பணிந்து போற்றும்
பரமதயா பரிஅருள்நீ பாலிப் பாயே!

எனக்கென்றோர் தனிவரம்யான் கேட்க வில்லை
என் இனத்தார் வாழ்வொன்றே கருத வில்லை
உனக்கெல்லா உயிர்களுமே சொந்த மென்ற
உண்மையையான் ஒருபோதும் மறந்த தில்லை
சினங்கொண்டு தீங்கிழைக்கும் தீயர் தாமும்
சீலமுற வேண்டுமென்றே வேண்டு கின்றேன்
தனக்கொருவ ரொப்பில்லாத் தாயே! இந்தத்
தாரணியில் சாந்தியையே தருவாய் நீயே!

முந்நாளில் முருகனுக்குச் சக்தி யீந்தாய்
முனிவரர்க்குந் தேவர்கட்குந் முதன்மை யீந்தாய்
பிந்நாளில் சங்கரர்க்கும் பெருமை யீந்தாய்
பேரின்பக் காதல்வளம் பெருக வைத்தாய்
இந்நாளில் இராமகிருஷ்ணர் ரமணர் போன்ற
இணையற்ற ஞானியரை உலகுக் கீந்தாய்
இந்நாட்டைச் சொந்த மென்னும் இருஇனத்தார்
இணங்கிவாழ்ந் திடச்செய்தல் அரிதோ அன்னாய்

அருளுவாய் அனைத்துயிர்க்கும் அன்னை யாகி
ஐந்தொழில்கள் புரிஆதி சக்தியே! நின்
கருணையின்றி கணக்கிலாக் கஷ்ட முற்றுக்
கதறிநிற்கும் உயிர்களுளத் தின்று சூழ்ந்த
இருளகல வழியேதும் இல்லை யென்ற
ஈடற்ற உறுதியுடன் இந்த ஏழை
உருகிநின்றுன் சந்நிதியில் கேட்ட யாவும்
உவந்தளிப்ப துன்கடனும் ஒப்பில் தாயே.

(நயினாதீவு நாகபூஷணியம்மன் மீது நவராத்திரி தோத்திரமாக இயற்றப்பட்ட இப்பஞ்சகம் அத்தேவி சந்நிதானத்தில் 26-9-57 வியாழக்கிழமை மாலை சமர்ப்பிக்கப் பட்டது.)

# தெய்வம் ஒன்று

— திருமுருக கிருபானந்தவாரியார் —

திருக்கோயில்களில் சிவலிங்கம் தக்ஷிணாமூர்த்தி, நடராஜர், சந்திர சேகரர், அம்பிகை, விநாயகர், முருகர், திருமால் என்ற பல மூர்த்திகள் இருப்பினும் அவைகள் அனைத்தும் ஒரே மூர்த்திதான்.

நெருப்பு—சிவபெருமான்
நெருப்பில் உள்ள சூடு—அம்பிகை
நெருப்பில் உள்ள செம்மை நிறம்—விநாயகர்
நெருப்பில் உள்ள ஒளி—முருகவேள்

"சுடரோ சிவபெருமான் சூடுபரா சக்தி
இடமார் கணநாதன் செம்மை—படரொளியோ
கந்தவே ளாகும் கருதுங்கால் சற்றேனும்
வந்ததோ பேத வழக்கு"

மலர்—சிவபெருமான்
மலரின் வடிவம்—அம்பிகை
மலரின் நிறம்—கணபதி
மலரின் மணம்—மயிலவன்

நூல்—சிவபெருமான்
நூலின் அகலம்—பார்வதி
நூலின் நீளம்—கணேசர்
நூலின் கனம் குமாரக்கடவுள்.

சிவபெருமானுடைய சக்திகள் நான்கு - அருள்சக்தி, போர்சக்தி, கோபசக்தி, புருஷசக்தி.

அருள் சக்தி - பார்வதி
போர் சக்தி - காளி
கோப சக்தி - துர்க்கை
புருஷ சக்தி - விஷ்ணு.

"அரியலால் தேவியில்லை ஐயன் ஐயாறனார்க்கே" என்பது அப்பர் வாக்கு.

முக்கண்ணன்—முக்கண்ணி
சங்கரன்—சங்கரி
திரபுரசுந்தரன்—திரிபுரசுந்தரி

என்பது போல், அரன்-அரி என வந்தது. ஆகவே திருமாலின் வழிபாடும், அம்பிகையின் வழிபாடும் ஒன்றென உணர்க.

திருக்கோவில்களில் காட்சியளிக்கும் துவாரபாலகர்களில் ஒருவர் ஆள்காட்டு விரலைக்காட்டி நிற்பது உள்ளே வழிபடச் செல்வோர்க்குக் கடவுள் ஒன்றே என்பதை அறிவுறுத்துகிறது. மற்றொரு துவாரபாலகர் ஒருகையை விரித்துக் காட்டுவது, கடவுள் ஒன்றைத் தவிர வேறொன்றில்லை என்பதை உணர்த்துகிறது. இதையே, 'ஏகம் ஏவ அத்வீதியம் ப்ரமம்' என்று வேதம் கூறுகின்றது. கடவுள் ஒன்றேதான்; இரண்டாவது இல்லை இல்லை என்பது இதன் பொருள்.

எனவே தெய்வ வழிபாடு செய்வோர் தெய்வபேதம், மூர்த்திபேதம் குறித்து மாறுபட்டு மலையாது நிலையாய அன்புடன் ஒரு பொருளைத் தியானித்து வழிபட வேண்டும்.

"யாதொரு தெய்வங் கொண்டீர்
அத்தெய்வமாகி யாங்கே
மாதொரு பாகனார் தாம் வருவர்"

-சிவஞானசித்தியார்

"ஆரொருவர் உள்வார் உள்ளத்துள்ளே
அவ்வுருவாய் நிற்கின்ற அருளும் தோன்றும்"

-அப்பர்

ஒரு காகிதத்திற்கு இரண்டு பக்கங்கள் இருப்பது போல், தெய்வத்திற்கும் இரண்டு பக்கங்கள் உண்டு. ஒன்று தட்பம். மற்றொன்று

வெப்பம்: வெப்பமும் தட்பமும் சமமாக இருந்தால்தான் மலர் மலராகக் காட்சியளிக்கும். வெப்பம் மிகுந்தால் மலர் வாடும். தட்பம் மிகுந்தால் மலர் அழுகும்.

இந்த உடம்பும் சீதோஷ்ணத்தால்தான் வாழ்கின்றது. ஒரு சமயம் இந்த உடம்பில் சூடு குறையுமானால் சுற்றத்தார் சூழ்ந்து கொள்வார்கள். மருத்துவர் வந்து (Too Late என்று கூறி) 'அவர் விரும்பியதெல்லாம் கொடுங்கள்' என்று சொல்லுவார். ஆகவே உலகிற்கு வெப்பமும் தட்பமும் இன்றியமையாதவை. வெப்பத்தின் நுண்மை சிவம். தட்பத்தின் நுண்மை திருமால். வெப்பத்தின் நிறம் சிவப்பு. தட்பத்தின் நிறம் பச்சை. எனவே சிவமூர்த்தி பவளம்போல் மேனியன். திருமால் பச்சைமாமலை போல் மேனியன். சிவம் அனல் ஏந்தி விளையாடுகின்றது. திருமால் ஆழியிடைத் துயிலுகின்றார். சிவாலயத்தில் வெந்த நீற்றையும்; விஷ்ணுகோயிலில் தீர்த்தப் பிரசாதத்தையும் வழங்குகின்றார்கள்.

பாதி சிவம்; பாதி விஷ்ணு. இந்தத் தத்துவத்தைச் சிவமூர்த்தங்கள் இருபத்து ஐந்தனுள் கேசவார்த்தமூர்த்தம் என்பது தெரிவிக்கின்றது. சங்கரநாராயணர் கோவிலும் இதற்குச் சான்று.

'தாழ்சடையும் நீள்முடியும் ஒண்மழுவும் சக்கரமும்
சூழரவும் பொன்நாணும் தோன்றுமால்--வீழும்
திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்
கிரண்டுருவும் ஒன்றாய் இசைந்து'.

என்று ஆழ்வார் கூறுகிறார்.

சிதம்பரம், திருநெல்வேலி, காஞ்சிபுரம், திருக்குற்றாலம், திருவருணை முதலிய திருத்தலங்களில் உள்ள சிவாலயங்களில் திருமாலும் காட்சி தருகின்றார்.

(அடுத்த இதழ்களில் 'இறைவன்' 'ஏன் வணங்க வேண்டும்?' என்னும் பகுதிகள் வெளிவரும்.)

# வீணை இசை மன்னன்

நான் எனது என்ற உணர்வுகள் அன்பை அழிக்க வல்லன என்பதைப் பின்வரும் கதை விளக்குகின்றது.

தஞ்சை சரபோஜி மன்னர் தியானத்தில் ஈடுபடும் பொழுது "ஓம்" என்ற பிரணவ மந்திரம் வீணையில் ஒலிக்கப் படுவதைக் கேட்டுக்கொண்டே இருக்க விரும்புவார். நாட்டிலுள்ள பிரபலமான வீணை ஆசானே இப் பணியைச் செய்யத் தகுதியுடையவர் எனக் கருதி அவருக்குப் பலவிதமான சன்மானங்கள் அளித்து உரிய காலத்தில் வீணைவாசிக்கும் பதவியில் அமர்த்தி இருந்தார். தன்னையன்றி இப்பெருமைக்குரிய அருகதை யாருக்கும் இல்லை என்ற செருக்கு அவ்வாசானிடம் காணப்பட்டது.

அவர் சில நாட்களாக நோய்வாய்ப்பட்டார். அக்காலத்தில் அரசரின் குறிப்பறிந்து நடக்க தன் மகனை அரச அவைக்கு அனுப்பி வைத்தார். விளையாட்டாக வீணை வாசித்த அவ் விளைஞனின் மேதா விலாசத்தில் மன்னன் மயங்கிவிட்டான். தனது தந்தை வாசிப்பதை அவதானித்தே வீணைப்பயிற்சி ஏற்பட்டது என்று இளைஞன் கூறிய பொழுது அரசர் பெரு வியப்பில் ஆழ்ந்தார்.

குணமாகி அரண்மனைக்குத் திரும்பிய வீணை ஆசான் நடந்ததை அறிந்தார். தனது மகனே என்றாலும் தன்னைவிடச் சிறந்தவன் எனப் புகழப்படுவதை அவரது அகங்கார, மமகார எண்ணங்கள் அனுமதிக்கவில்லை. மகனைப் பாராட்ட, கையில் முத்தமிடுவது போல நடித்து இனிமையாக வீணகானம் இசைக்கும் விரலொன்றைக் கடித்து விட்டாராம் அவ்வாசான்.

"மலர்மிசை ஏகினன் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்".

—திருக்குறள்

## இறைவனைச் சரணடைந்தவர்
## நீடூழி வாழ்வர்

# K. Sundaram & Co.

Davee's Enterprise
No. **83**, Mihindu Mawatha
**COLOMBO-12**

சிந்தனையாளர்-ஆராய்ச்சியாளர்களுக்கு

அரியதோர் விருந்து

"யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்," நாவலர் பெருமான் எண்ணிய, நடைமுறைப்படுத்திய தருமங்களில் ஒன்றாகும் – இல்லை - பிரதிபலிப்பாகும்.

இப்பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவர், பேராசிரியர், கலாநிதி க. கைலாசபதி அவர்களின் தலைமையில் முப்பத்துமூன்று விரிவுரையாளர், பேராசிரியர், கலாநிதிகளின் அரிய ஆராய்ச்சிக்கட்டுரைகளைத் தன்னகத்தே கொண்டு, யாழ். பல்கலைக் கழகத்தின் கன்னிப் படைப்பாய் வந்துள்ளதே!

# நாவலர் நூற்றாண்டு மலர் 1979

கிடைக்கப்பெற்றுவிட்டீர்களா? இதுவரை கிடைக்கப்பெறவில்லையானால் கீழ்க்காணும் முகவரிக்கு வருகைதந்துபெற்றுக்கொள்ளுங்கள். பிரதிகள் நூற்றுக்குக் குறைந்த அளவே இருக்கின்றன.

பிரதியின் விலை ரூபா **50/-** (ஐம்பது)

"திருவருள்" சைவசமய சஞ்சிகை விற்பனையகம்

30, வைமன் வீதி — நல்லூர்

யாழ்ப்பாணம்.

## உழவுக்கும் தொழிலுக்கும்
## வந்தனை செய்வோம்

நம்மனைவருக்கும் இகபர சுகங்களை
இனிதே தந்தருள இறைவன்
திருவருளை வேண்டுகிறோம்.

★

# RENUKA INDUSTRIES

Importers, Exporters & Manufactures of
Aluminiumwares

170, 172, Old Moor Street

## COLOMBO - 12

Telephone: 35579

அன்பும் பண்பும் நிறைந்த
சேவைசெய்து தங்களை
மகிழ்விப்பதே எமது நோக்கம்

கணபதி ராயன் – அவனிரு
காலைப் பிடித்திடுவோம்.
குண மூயர்ந்திடவே - விடுதலை
கூடி மகிழ்ந்திடவே.

# VENGATESHWARA

## 93, Keyzer Street

## COLOMBO - 11

Telephone: 24588

# வெங்கடேஸ்வரா

## 93, கெய்ஸர் வீதி

## கொழும்பு-11

நாமும் வாழ்ந்து
பிறரையும் வாழவிடுவோம்

நியூ கிருபா ஸ்ரோர்ஸ்
23, கபோஸ் லேன் - கொழும்பு-11
தொலைபேசி: 27900

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
ஏவரும் துதிக்க நின்ற ஈராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி யன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி.

— கந்தபுராணம்.

**R. M. P. PULAMADAN** Chetty & Sons Ltd.

MEENAMBIKAI OIL MILLS

**KELANIYA**

Telegrams:
"AREMPIE"

Telephone No,
075 - 321
075 - 322

"இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது
நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம்
பெறும் பொருட்டேயாம்"

— ஆறுமுகநாவலர்

★ ★ ★


## ஸ்ரீநிவாசன்ஸ் கோ., லிமிற்றெற்

— ஏற்றுமதியாளர்கள் —

**102, குமார வீதி — கொழும்பு - 11.**

தபாற்பெட்டி எண் — 673 தொலைபேசி: 24813
டெலெக்ஸ்: 21244 26575


திருவருள் கிடைக்கும் இடங்கள்:

சிங்கப்பூர்: திரு. K. அம்பலவாணர் அவர்கள்
101!, G Lange Road, Singapore 19 - 54.

அவுஸ்திரேலியா: திரு. ச. சண்முகமணி அவர்கள்,
11, Melville St., West Ryde, New South Wales, 2114

இந்தியா: திரு. T. பாலசுப்பிரமணியம் அவர்கள்
13, வீரப்பன் தெரு, திருமங்கலம், மதுரை மாவட்டம்


Printed at The Vipulananda Press, 248/5, K. K. S. Road, Jaffna & Published by Mr. R. Vaithamanithy of No. 5, Brassfounder's Street, Colombo - 13, for and on behalf of Thiruvarul Association
Chief Editor Mr. V. Sathasivam M. A.